211

# ண்ணன்

15-9-'58
13 ந.பை



# கண்ணன் தபால்கள்

கண்ணன் வெளியீடுகள் சிலவற்றை என் பையன் வாங்கி வந்தான்: அவற்றை நானும் படித்துப் பார்த்தேன். எல்லாம் என் உள்ளத்தைக் கவர்ந்தன. என் பாராட்டை ஏற்றுக்கொள்ளுங்கள்.

—ஜம்புநாதன், புதுடில்லி.

எஸ். விசுவநாதனை அறிமுகம் செய்துள்ள முறை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கண்ணனைத் தயவு செய்து வார இதழாக மிஸிரச் செய்யுங்கள்.

—தெ. பா. சீதாராமன், சென்னை-1.

தங்கையின் நடனம் அற்புதம். காணும் ஒரு நவீன கற்பனை! காட்கில் பஞ்சாப் கவர்னராக நியமனம் ஆகிவிட்டதால் ஸி. பி. என். சிங்கைப் பற்றி விவரம் எழுதியிருப்பது அசுவாரசியமாகப் போய் விட்டது.

—ஆர். சாந்தா, கோவை-1.

'ஜனு' யார்? மறைக்காதீர்கள்! ஆர்வியாரே, 'ஜனு' என்னும் போர்வையைக் கிழித்தெறிந்துவிட்டு வெளியில் வாரும்.

—மு. பழனியப்பன், குருவிக்கொண்டான்பட்டி.

'நிலா ஏணி' ஸ்பெயின் நாட்டுக் கதை என்பதைக் குறிப்பிட்டிருந்தேன். அதைக் கதையோடு சேர்த்துப் பிரசுரிக்காமல் போனதால் தப்பபிப்ராயம் ஏற்பட இடம் ஏற்படும். இதை அடுத்த இதழிலாவது குறிப்பிட்டுவிட வேண்டுகிறேன்.

—'சுகி', திருச்சிராப்பள்ளி.

காலதாமதம் செய்யாமல் சமூக சித்திரக் கதை ஒன்றை ஆரம்பியுங்கள். சரித்திரம் சலித்துவிட்டது. —பி. ஜி. நந்தகுமார், பம்பாய்-14.

நான் பெரிதும் மதித்த 'தமிழ் ஒளி'யின் கவிதை (15-8-58) மூடர்தான் மூட்டை சுமக்க வேண்டும்; கல்லார்தான் கட்டை சுமக்க வேண்டும் என்ற தவறான கருத்தை ஏற்படுத்தி விட்டது.

—எஸ். பெருமாள், குருமலை வெங்கடேசுவரபுரம்.

அண்ணன் கடிதம் அறிவை வளர்க்கும் பகுதி.

—வி. சடகோபாச்சாரி, பட்டுக்கோட்டை.

தமிழ் ஒளியின் பாடல்கள் இரண்டும் அற்புதம்.

—செ. தம்பி, அதிரை.

'தொடரும்' என்பதைப் போடாதீர்கள்; அது எனக்கு வேதனையைத் தருகிறது.

—இ. செல்வமணி, காஞ்சீபுரம்.

செட்டியாரின் சிக்கனம் சிக்கனத்துடன் எழுதப்பட்டிருக்கிறது.

—எஸ். வேலுமணி, பேரூர்.

'தமாஷ்' என்று தனியாக ஒரு பகுதியை ஆரம்பிக்க வேண்டும்.

—ஏ. பவர்லால், ஆண்டர்சன்பேட்டை.

காலம் சொல்லும் கதை அவசியம் வேண்டும்.

—சுகந்தன், ஒரத்தநாடு.

நெடுங்கதை என்றால் பதினாறு பக்கங்களாவது இருக்க வேண்டாமா?

—கோ. சுவாமிநாதன், T. பழூர்.

ஜனு யார் என்று சொன்னால் என்ன? குறைந்தா போய்விடுவீர்கள்?

—தமிழ்மாறன், புவனகிரி.

அண்ணன் கடிதங்களுக்குத் தம்பியின் பதில்களை எழுதியனுப்பட்டுமா?

—கு. சென்னியப்பன், ஈரோடு.

இரு நண்பர்கள் உப்புச் சப்பில்லாமல் இருக்கிறது.

—எஸ். செல்லம், மதுரை.

கண்ணனைத் தேதி போடாமல் வெளியிட்டால் நலம். 1-ஆம் தேதி கண்ணன் 5-ஆம் தேதி வருகிறதே. அதனால்தான் சொல்கிறேன்!

—கே. ஏ. முகம்மது, சிதம்பரம்.

மலர் 9 இதழ் 18

15—9—1958

# குழந்தைகளே!

கண்ணன் மிக மிக நன்றாக இருக்கிறது; ஆனால் அதன் தாமதத்தைத்தான் பொறுக்க முடியவில்லை என்று பல கடிதங்கள் வருகின்றன. இன்னும் இரண்டு மூன்று இதழ்கள் சிறிது தாமதமாக வந்தாலும் கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் பாருங்கள், குறிப்பிட்ட நாளுக்கு முன்னாலேயே உங்கள் முன் கண்ணன் வந்து நிற்கிறானா இல்லையா என்று

தமிழ் நாட்டின் சிறந்த கவிஞரான பாரதியின் விழா நாடெங்கும் நடைபெற்று வருகிறது அவருடைய நினைவாக இந்த இதழில் ஒரு பாடல் வெளியாகியிருக்கிறது. பிள்ளையார் பாடலை நீங்கள் விரும்பிப் படித்துக் களிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

கண்ணன் தீபாவளி மலர் வேலையை இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறேன். அதற்குள்ளே அதை 1 அல்லது 15- ஆம் தேதி இதழாக வெளியிடாமல் தனி இதழாக வெளியிடுமாறு பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அடேயப்பா! எதையாவது ஒன்றைப்பற்றிக் கேட்டு ஒன்றை வாங்குவதில் உங்களுக்கு நிகர் நீங்களேதான்!

இந்த மலரில்தான் விடுமுறைக் காலப்போட்டிக் கதைகள், கட்டுரைகள், சித்திரங்கள் முதலியவற்றை வெளியிட உத்தேசித்துள்ளோம். பரிசு பெற்றவர்களுக்கும் இது பெருமை; படிப்பவர்களுக்கும் இது அருமையாக இருக்கும்!

—ஆசிரியர்.

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.



## எம். ஜோவலன் வாஸ்

'தேன் மலர்' என்ற புனை பெயரில் மறைந்திருக்கும் ஜோவலன் வாஸ் இயற்பெயரிலும் கதைகள் எழுதுவதுண்டு. இவருக்கு வயது இருபதுதான் ஆகிறது. ஆனால் இருபதை எட்டு முன்னரே இவர் இலக்கியத் துறையில் அடியெடுத்து வைத்து ஓரளவு வெற்றியும் கண்டுவிட்டார்.

நெல்லையைச் சேர்ந்த சிப்பிகுளத்தில் பிறந்த இவர் இலங்கையில் இன்று தட்டெழுத்துப் பரீட்சைக்குப் பயின்று வருகிறார். இவருக்குத் தேவையான பணத்தை எழுதியே சம்பாதிக்க முயல்கிறார். இலங்கை வானொலியிலும், வீரகேசரியிலும் சென்னைப் பத்திரிகைகளிலும் அடிக்கடி எழுதி வரும் ஜோவலன் வாஸ் ஏழைமையே தன் தோழன் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆயினும் அதை எதிர்த்து முறியடிக்கும் திறமை இவருடைய பேனாவுக்கு உண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

இலங்கை வானொலியில் சிறுவர் பலருக்கு அடிக்கடி எழுதிவரும் ஜோவலன் வாஸ் பெரியவர்களுக்கும் ஒரு நாடகம் எழுதி அதை ஒலிபரப்பச் செய்திருக்கிறார். இளமையோடு ஆர்வமும் திறமையோடு தகுதியும் இளைஞர்களுக்கு ஏற்பட வேண்டும். அதற்கு இவர் ஓர் எடுத்துக் காட்டு.

# அஸ்ஸாம் கவர்னர் பஸுல் அலி



பத்ம விபூஷண ஸர் சையது பஸுல் அலி, பி. ஏ., பார் - அட் - லா, எல் எல். டி அஸ்ஸாம் ராஜ்யத்தின் கவர்னராக 1956 மே முதல் இருந்து வருகிறார்.

இன்று எழுபத்திரண்டு வயது நிரம்பப் பெற்ற அலி, இளம் பிராயத்தில் காசியிலும் பாலியப் பருவத்தில் அலகாபாத்திலும் கடைசியில் லண்டன் மாநகரிலும் படித்துப் பட்டம் பெற்றவர். பாட்னாவில் பாரிஸ்டராகத் தொழிலைத் துவக்கி, பாட்னா உயர் நீதி மன்றத்திலேயே நீதிபதியாகவும் நியமனம் பெற்றார். அந்த நீதி மன்றத்திலேயே தற்காலிக சீப் - ஜஸ்டிஸாகவும் சில காலம் பணி புரிந்திருக்கிறார். ஆங்கிலேயர் ஆட்சியின்போதே இவர் நிரந்தரத் தலைமை நீதிபதியாகவும் ராயல் இந்தியன் கடற்படைக் கலக விசாரணைக் கமிஷன் தலைவராகவும் இவர் நியமனம் பெற்றார்.

இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகும் பெரிய பெரிய பதவிகள் இவரை வந்தடைந்தன. ஐ. நா. பொதுச் சபையில் இந்தியாவின் பிரதிநிதிகளில் ஒருவராகச் செல்லும்படி இவரை அனுப்பினார்கள். அதிலே ஐந்தாவது குழுவுக்குத் தலைமை வகிக்க வேண்டிய பொறுப்பும் இவருக்கே தரப்பட்டது.

இவற்றை முடித்துக்கொண்டு இந்தியாவுக்கு வந்தால் இங்கே மீண்டும் இந்தியாவின் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிப் பதவி இவருக்காகக் காத்திருந்தது. அதிலிருந்து ஒரிஸ்ஸா ராஜ்யத்தின் கவர்னராக இவரை நியமித்தார்கள். ராஜ்யப் புனரமைப்புக் குழுவின் தலைவராகக் கொஞ்ச காலம் பதவி வகிக்க நேர்ந்தது. இப்பொழுது இந்தியாவின் மேற்கு எல்லை ராஜ்யமான அஸ்ஸாமின் கவர்னராக இருந்து வருகிறார் இவர். இப்படி ஆரம்பம் முதலே பதவிக்குமேல் பதவியாக வகித்து, சிறந்த அநுபவம் எல்லாம் பெற்று விளங்கும் இவரை நாளைக்கு எந்தப் பதவியில் நியமிப்பார்களோ, நமக்கு என்ன தெரியும்? ஆண்டவன் இவருக்கு நீண்ட ஆயுளை வழங்க வேண்டும் நமது சர்க்கார் பதவியும் வழங்கத் தயங்காது!




# அண்ணன் கடிதங்கள்

சம்பந்தம்

அன்புள்ள தம்பிக்கு,

என் கடிதங்களை மிகவும் ரசித்ததாகவும் அவைகளை அப்படியே வரிசைக் கிரமமாகத் தொகுத்து வைக்கப் போவதாகவும் எழுதியுள்ளாய். மிக்க சந்தோஷம். நீ கடிதங்களைத் தொகுத்து வைக்கப் போவதற்காக நான் ஒன்றும் சந்தோஷப்பட்டுக் கொள்ளவில்லை. ஆனால் அப்படித் தொகுத்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்தல்லவா உனக்கு? அதை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஏனென்றால் நல்ல மனத்தில்தான் நல்ல எண்ணங்கள் தோன்றும். அதோடு ஒவ்வொருவர் வாழ்க்கையும் அவரவர் எண்ணத்தாலேயே தானே ஆக்கப் படுகிறது?

அதிருக்கட்டும். 'காலையில் எழுந்திரு, கடவுளைத் தொழு' என்று நீ வாசித்திருக்கிறாய் அல்லவா? ஆனால், 'ஏன் கடவுளைத் தொழ வேண்டும்? எதற்காக அப்படிச் செய்யவேண்டும்?' என்றெல்லாம் நீ எப்பொழுதேனும் யோசித்ததுண்டா? யோசித்திருப்பாய். இல்லை; யோசிக்காமலும் இருந்திருப்பாய்! அப்படித்தானே?

ஒரு பொருளிலிருந்து மற்றொரு பொருள் உண்டாகிறது என்று விஞ்ஞான விதியிருந்தாலும், எந்தப் பொருள் மூலப்பொருள்? உதாரணமாய் விதையிலிருந்து மரம் உண்டாகிறது; மரத்திலிருந்து விதை உண்டாகிறது. ஆனால் முதன் முதலில் ஏற்பட்டது விதையா, மரமா? ஏதுவோ ஒன்றாய்த்தான் இருந்திருக்க வேண்டும். அது எப்படி ஏற்பட்டது? இதைக்கொண்டே, நம்மால் உணர முடியாத, சாதாரணக் கண்களால் பார்த்து அறிந்துகொள்ள முடியாத ஏதோ ஓர் அரிய சக்தி இவ்வுலகத்தையே இயக்குகிறது என்று தெரிகிறதல்லவா! அது ஓர் உன்னத பூஜிதமான சக்தி. அந்தச் சக்தி எங்குமே நிறைந்துள்ளது. அதைத்தான் நாம் கடவுள் என்று பெயரிட்டு அழைக்கிறோம்.

இவ்வுகத்திலுள்ள சகல ஜீவராசிகளுமே நீ, நான் உள்பட கடவுளின் படைப்புகள்தான். அறிவுச் சுடராகக் கடவுள் உன்னுள்ளேயும் திகழ்கிறார்; என்னுள்ளேயும் திகழ்கிறார். அப்பேர்ப்பட்ட கடவுளை நீ தினம் தொழாமலிருப்பது நியாயமாகுமா? நீயே ஆழ்ந்து யோசித்துப் பார். உனக்கே விளங்கும்.

தினம் அதிகாலையிலெழுந்ததும், மறவாமல் கடவுளைத் தொழு. "எல்லாம் வல்ல இறைவனே! எனக்கு உன் அருளைக் கொடு. என் அறிவு பெருகட்டும். நான் தவறு செய்யும் பொழுதெல்லாம், என்னைத் தடுத்தாட் கொண்டு, எனக்கு நேர்வழியைக் காட்டு!" என்றெல்லாம் நீ—மனத்தை ஒரு நிலையில் கட்டி—அவசியம் தொழ வேண்டும். இவ்வண்ணம் நீ இரவு வேளையிலும் தவறாது தொழுத பிறகே படுக்கச் செல்ல வேண்டும். கடவுளைத் தொழுவதை உன் கடமையாகப் பாவித்து, தினந் தவறாமல் நீ ஒழுங்காகத் தொழுது வந்தால், அவருடைய அருள் உனக்கு அவசியம் கிட்டும்.

மகாத்மாகாந்தி தன் சிறுவயதிலிருந்தே காலைத் தொழுகையை மறந்ததே கிடையாது. அப்பொழுதுதான், அவர் மனம் நாள் முழுவதும் உற்சாகமாகக் காரியத்தில் இறங்குமாம்; ஏதோ அசந்தர்ப்பத்திலோ, அல்லது தவிர்க்க முடியாத காரணத்திலோ காலைத் தொழுகை தவறிப்போய் விட்டால், அன்று நாள் முழுவதும் அவர் மனம் குற்றம் புரிந்ததாகக் குறு குறுத்துக் கொண்டிருக்குமாம். கடவுளைத் தொழுவதில் அவ்வளவு ஈடுபாடு அவருக்கு.

அதற்காகப் பரீட்சையில் வெறுங்காகிதத்தை மடித்துக் கொடுத்துவிட்டு, 'கடவுளே அதில் சரியான பதில்களை எழுதி வைத்து விடேன்!' என்று வேண்டிக் கொண்டால், காரியம் நிறைவேறி விடுமா? ஆனால் கடவுளின் அருளால் உன் அறிவு விளக்கமுறும். நீ படிப்பதெல்லாம் மனத்தில் பளிச்செனப் பதியும். எழுதும் பொழுது சரியான விடையே உன் மனத்தில் உதிக்கும். பரீட்சையில் நீ முதல்வனைத் தேறலாம்.

வகுப்பிலும் நீ ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சரியான விடையையே சொல்வாய். படித்தப் பாடங்களனைத்தும் பசுமரத்தாணிபோல் உன் மனத்தில் பதிந்துள்ள பொழுது, தவறான விடையை நீ எவ்வாறு சொல்வாய்?

மற்றும் நீ தவறு செய்ய நேரும் பொழுதெல்லாம் 'வேண்டாம் தவறு செய்யாதே!' என்று தடுத்தாட்கொள்வார் கடவுள். பிறகு பள்ளியில் நீ ஒரு மேலான மாணவனாயிருக்கக் கேட்க வேண்டுமா?

அனைவரையும் நீ அன்பாக நேசிக்கத் தொடங்குவாய். உன்னையும் அனைவரும் அன்பாய் நேசிப்பார்கள். இவ்வண்ணம் உன் வாழ்க்கையே குதூகலமாக அமையும்.

அதனால் நீ எதை மறந்தாலும் என்றும் கடவுளைத் தொழ மறக்கவே மறக்காதே! மற்ற மாணவர்களுக்கு நீ ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும். அதுவே என் அவா.

உனதன்புள்ள
அண்ணன்.

---

# அசடு வழிந்தது

அன்று ஒரு பிரபல எழுத்தாளர் கதை - வசனம் எழுதிய படம் திரையிடப்பட்டது! அன்று மக்கள் காட்டும் அமோக வரவேற்பை நேரில் காண, அந்தப் படத்தின் கதாசிரியரே வந்திருந்தார்.

தம் எதிரே வரும் நபரைக் கண்டதும் அவர் முகம் மலர்ந்தது. ஓர் ஏளனப் புன்னகையை உதட்டோரம் நெளியவிட்டார்!

எதிரே வந்தவர்—

அவரும் ஒரு கதாசிரியர் தான்! ஆனால் இருவருக்கும் ஒருவரைக் கண்டால் மற்றவருக்குப் பிடிக்காது. எப்பொழுதும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டேயிருப்பார்கள், எதிரே வந்தவர் காரணங்களைத் தேடிப் பிடித்துக் குறை கூறி பகை பாராட்டுவார்.

தம்மை எப்போதும் தாக்கிக் கொண்டேயிருக்கும் அவரை மட்டந்தட்ட வேண்டும். அதற்கு இதுவே சமயமென்று திரைக் கதாசிரியர் நினைத்தார் போலும்.

எனவே கிண்டலாக, 'ஓ! தாங்களா! என்ன அதிசயம் பார்த்தீர்களா! நான் எழுதிய படமென்றதும், முதல் நாளே விழுந்தடித்துக்கொண்டு ஓடிவந்திருக்கிறீர்களே! என் திறமையே அலாதி தான்!'' என்றார் பெருமையாக.

வந்தவர் ஆத்திரப்படவில்லை. சிரித்துக் கொண்டே, ''என்ன செய்வது? இந்தப் படம் நாளை வரை ஓடுமென்பது என்ன நிச்சயம்? முதல் நாளே பார்த்து விட்டால், அதிலுள்ள குறைகளைக் கூறி, மேலும் இவ்வளவு மோசமான தவறுகளைத் தாங்கள் செய்யவொட்டாமல் கண்டிக்கலாமென்றுதான் முதல் நாளே ஓடி வந்தேன்!'' என்றார்.

மட்டந்தட்ட நினைத்த கதாசிரியரின் முகத்தில் அசட்டுக்களை வழிந்தது! (சர்ச்சில் வரலாறு)

—ப. கி. மூர்த்தி.




## 24. வாள்முனையில் நெடுமாறன்!

சிங்கராயன் பலமாக, பயங்கரமாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பிலே ஏளனமும் வஞ்சமும் கோபமும் வெறுப்பும் வர்ணம் போலக் கலந்திருந்தன. தான் தேடிய இரையின்மீது பாய்வதற்குமுன் பயங்கரப் புலி சிரித்தால் எப்படியிருக்குமோ, அவ்வாறு இருந்தது அவனுடைய சிரிப்பு.

நெடுமாறன் ஒரு முடிவுக்கு வருமுன்னமே சிங்கராயன் பக்கத்திலிருந்த இரண்டு கிங்கரர்களைப் பார்த்துக் கண் ஜாடை காட்டினான். உடனே அந்த இரண்டு வீரர்களும் நெடுமாறன்மீது குபீரெனப் பாய்ந்து அவனை இறுகப் பிடித்துக்கொண்டார்கள்.

நெடுமாறன் முதலில் சிறிது தயங்கினான். தன் கண்களின் பார்வையைக் கொண்டே தன்னை அடையாளம் கண்டுகொண்டுவிட்ட சிங்கராயனின் சாமர்த்தியத்தைக் கண்டு அவன் மனத்துக்குள்ளாகவே வியந்தான். ஆயினும் தயங்கவும் வியந்து நிற்கவும் இது நேரமல்ல என்று அவனுடைய பகுத்தறிவு இடித்துரைத்தது.

‘‘உம்’’ என்று ஒருமுறை பலம் கொண்ட மட்டும் தன் மூச்சை இழுத்துப் பிடித்தான். அடுத்த கணம் இறுகிய சங்கிலி இற்றுத் தெறிப்பதுபோல் அவனை அசைய வொட்டாமல் கட்டிப் பிடித்திருந்த காளையர் இருவரும் எட்டப் போய் விழுந்தார்கள். சிங்கராயனின் கொடிய வாள் அவன் நெஞ்சுக்கு எதிரே நீட்டிக்கொண்டு வந்தது. ஆனால் அவன் அணிந்திருந்த மார்புக் கவசத்தினுள்ளே பாயத் திறனின்றி அது தடைப்பட்டு இடறியது. நெடுமாறன் வில்லிலிருந்து புறப்பட்ட கணையைத் தடுப்பதுபோல, அந்த வாளை ஒரு தட்டுத் தட்டிவிட்டு இரண்டடி பின்னால் சென்று பூனைமாதிரி பதுங்கினான். கண் இமைக்கும் நேரத்துக்குள் புலிபோல அவர்களைத் தாண்டி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். அந்த வேகத்தில் அவன் பத்தடிக்கு அப்பால் போய் நின்றான்.

சிங்கராயன் கண்கள் சிவக்க, வெஞ்சினத்தால் நெற்றி நரம்பெல்லாம் தடித்துப் புடைக்க, அவனை நோக்கி வாளை ஓங்கினுன். அவனேடு வந்த வீரர்கள் வாளும் வேலும் மோத அவனைப் பிடிக்க முன்னுல் பாய்ந்து வந்தார்கள்.

அடுத்த நொடியில்,—

"நிறுத்துங்கள்!"

அழுத்தம் திருத்தமான இந்த ஆணையைக் கேட்டு, அத்தனை பேரும் குரல் வந்த திக்குப் பக்கமாகத் திரும்பினுர்கள். ஓங்கிய கைகள் ஓங்கியவாறு நின்றன.

நிலவறையை அடுத்து அமைந்திருந்த வேங்கையாருடைய அந்தரங்க மாளிகையின் வாயிற் கதவு சிறிதே திறந்து காணப்பட்டது. அந்த இடைவெளியில் புலிநகம் வைத்துப்பதித்த ரத்தின ஆரம் பளபளக்க, கல்லிழைத்துக் கட்டிய கட்கமும்



கங்கணமும் கண்களைப் பறிக்க, சிரித்த முகம் காட்டிக் காட்சி தந்தான் நாகர் தலைவனான இளநாகன்!

நெடுமாறன் கைபட்டு ஓசையெழுப்பிய கிண்கிணி மணிகள் தான் இளநாகன் வெளியில் வருவதற்குக் காரணமாக இருந்தன. இதை நெடுமாறனும் அறிந்துகொண்டான்; சிங்கராயனும் உணர்ந்தான். உடனே அவன் தன்னுடைய பற்கள் எல்லாம் தெரியக் காட்டிப் பரிதாபமாக வணங்கி நின்றான்.

"என்ன இங்கே?" என்றான் இளநாகன்.

"ஒன்றுமில்லை; இதோ இவன்தான் அந்த வில் வீரன்! அன்று ஓடிப் போனானே அவன்!" நெடுமாறனைப் பெரிய குற்றவாளிபோல் சுட்டிக் காட்டினான் சிங்கராயன். வேங்கையார் என்றால் அவனைக் கண்டுபிடித்துவிட்டதற்காகச் சிங்கராயனைப் பாராட்டியிருப்பார். அத்துடன் அவனை அந்த இடத்திலேயே கண்டதுண்டமாக்கவும் கட்டளையிட்டிருப்பார். ஆனால் இளநாகனுக்கு நெடுமாறன் சிறந்த வில்லாளன் என்பதைத் தவிர வேறு என்ன தெரியும்? ஆகவே, அவன் உடனே, "ஓ - இவன் தானே அன்று எல்லாப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவன்!" என்று மகிழ்ச்சியோடு தன் வியப்பைக் காட்டினான்.

"அடேடே, உன்னை அழைத்துப் பரிசுகள் தரவேண்டும் என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே—நீ ஏன் போய் விட்டாய்?" என்று நெடுமாறனையே பார்த்துக் கேட்டான்.

வேறொரு சந்தர்ப்பமாக இருந்தால், இதுதான் சமயம் என்று நெடுமாறன் வெகு எளிதாகத் தப்பிச் சென்றிருப்பான். ஆனால் இளநாகனைக் கண்டதும் செங்கணனின் தாய் கூறிய அனைத்தும் அவன் நெஞ்சிலே வந்து தேங்கி நின்றது. அந்த வேட்டுவத் தாயின் வேதனையையெல்லாம் அறியாத இளநாகனை இந்த வேளையில் இந்த நிலையில் சந்திக்க நேரும் என்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவனைக் கண்டதும் அவன் எண்ணி வந்த திட்டங்கள் எல்லாம் சட்டென மாறிவிட்டன. இளநாகன் தன்னிடம் இனிமையாகப் பேசத் தொடங்கியதைக் கண்டதும் அந்த இடத்தைவிட்டுத் தப்பிச் செல்லும் எண்ணமே போய் விட்டது. இளநாகன் கேட்ட கேள்விக்கு விடை கூறக்கூட அவன் மறந்து நின்றான்.

"இவன் பெரிய..இவன் பெரிய மோசக்காரன்..திருடன்.. இவனை.." மேலே என்ன சொல்வது என்று புரியாமல் தயக்கத் தோடும் ஆத்திரத்தோடும் நிறுத்தினான் சிங்கராயன்.

"அப்படியா? இவனைப் பார்த்தால் இந்தக் காளிகோட்டை வீரனைப் போல இருக்கிறானே - அப்படி என்ன செய்தான் இவன்?" என்று, நெடுமாறனை நெருங்கி வந்தான் இளநாகன்.

இப்பொழுது சிங்கராயனுக்கு வேறு ஒரு பயம் வந்து விட்டது. செங்கணனையும் கிழவனையும் அடைத்து வைத்திருக் கும் உண்மை இளநாகனுக்குத் தெரிந்துவிட்டால் வேங்கையார் தன் தலையையே வாங்கிவிடுவார் என்ற அச்சம் எழுந்தது. ஆத்திரப்பட்டு, அவசரப்பட்டு நெடுமாறன் யார் என்பதைச் சொல்லிவிட்டதாக அவன் நாக்கைக் கடித்துக்கொண்டான்.

பிறகு சட்டென்று பேச்சை மாற்ற எண்ணி, ''இவன் அரசரின் அந்தப்புர மாளிகைக்குள் நுழைய வந்தான். அதனால் தான்....இவனை இழுத்துச் சென்று விசாரணைக் கூட்டத்திலே விட்டு வையுங்கள். நான் வந்து பேசிக் கொள்கிறேன்!'' என்று தன் ஆட்களை நோக்கிக் கட்டளையிட்டான்.

''நில்லுங்கள் கொஞ்சம்! அப்படியானால் இவன் காளி கோட்டையைச் சேர்ந்த வீரன் அல்லவா?''

''இல்லை.''

''இத்தனை சிறந்த வில்வீரனா இப்படித் திருட்டுத்தனமாக உள்ளே நுழைய முயன்றிருக்கிறான்? இதில் ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது. அல்லது முக்கியமான காரணம் ஏதாவது இருக்க வேண்டும்..''என்று சொல்வதற்குள் நெடுமாறன், 'ஆம்' என்பது போலத் தலையை அசைத்தான்.

பிறகு இளநாகன் அவன் பக்கம் திரும்பி, ''நீயா இந்த அந்தப்புர மாளிகையினுள் நுழைய முயன்றாய்?'' என்று கேட்டான்.

''ஆமாம்..ஆனால் அது அந்தப்புர மாளிகை என்பதை நான் அறியேன்!''

''அது சரி; அரண்மனையின் கட்டுக்காவல்களை மீறி, உள்ளே நுழைந்து வருவது குற்றம் என்பதுகூட உனக்குத் தெரியாதா?''

''தெரியும்.''

''பின்னே ஏன் வந்தாய்?''

''குற்றத்துக்காகத் தண்டிப்பவர்களே குற்றம் செய்ய முன் வந்தால் வேறு என்ன செய்வது?''

சிங்கராயன் கோபத்தினால் வாளையுருவி இழுத்து, ''அதிகப் பிரசங்கி! அதிகம் பேசினால் உன் நாவை அறுத்துவிடுவேன்!'' என்று அவன்மீது பாய்ந்தான். இளநாகன் முறை தவறி இந்த விஷயத்தில் தலையிடுவதைத் தடுக்க வேறு வழி ஒன்றும் அவனுக்குத் தெரியவில்லை.

''ஏண்டா நிற்கிறீர்கள்? நம் அரசரை அவமதிக்கும் இந்த அற்பனுடைய பேச்சை இன்னுமா கேட்டுக்கொண் டிருக்கிறீர்கள்? உம்—பிடித்து இழுத்துச் செல்லுங்கள்!'' என்று கத்தினான்.

அடுத்த கணமே அவனுடைய பிடரி இளநாகனுடைய கையில் இருந்தது. அந்த நாகர் தலைவன் சற்றும் பதற்றப் படாமல், சிறிதும் பிரயாசைப்படாமல் சிங்கராயனைப் பிடித்து இழுத்து, ''நான்தான் கேட்டுக்கொண் டிருக்கிறேனே! அதற்குள் ஏன் எண்ணெயில் விழுந்த அப்பம்போலத் துள்ளுகிறாய்? உங்கள் அரசரை அவமதிப்பவனை நான்மட்டும் வேடிக்கையா பார்த்துக் கொண்டு இருப்பேன்?''

''அவன் பொய்யன்; கள்ளன்; மோசக்காரன்; ஜாலக் காரன்!'' என்று படபட வென்று அடுக்கினான் சிங்கராயன்.

''சரி; நீ சொல்வதையெல்லாம் சொல்லிவிடு. அப்புறம் அவன் சொல்லலாம்!'' என்றான் நாகர் தலைவன்.

"அரசே! என் கடமையை நான் செய்கிறேன். என்னைத் தடுப்பது முறையல்ல. காளிகோட்டையின் சொந்த விஷயங்களில் தலையிட உங்களுக்கு அரசர் உரிமை வழங்கவில்லை. விடுங்கள் என்னை!" என்று திமிறினான் சிங்கராயன்.

இளநாகன் இதற்குச் சிரித்துவிட்டு, "நான் யாரிடமும் பொய் உரிமையை வழங்கும்படி யாசிப்பதில்லை. நினைத்தால் உரிமையை நானேதான் எடுத்துக்கொள்வேன். வேண்டாமென்றால் உதறி எறிந்துவிடுவது என் வழக்கம். ஆகவே.. கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு இரு..சரி..நீ சொல், இனி மேல். உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

"நெடுமாறன்!"

"நெ..டு..மா..ற..ன்!" ஏதோ யோசிப்பதுபோல் தோன்றிய இளநாகன் சட்டென்று புருவத்தைச் சுளித்து, "சரி; அதைப் பிறகு கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் ஏதோ குற்றம் செய்தார்கள் என்றாயே! என்ன அது?" என்று அதே இள முறுவலுடன் கேட்டான்.

"அதை இவர்களுக்கு எதிரில் சொல்ல நான் விரும்பவில்லை. இப்படித் தனியாக வந்தால்.."

"குற்றத்தைக் குற்றவாளிகளுக்கு எதிரில் சொல்வதுதானே முறை?"

நெடுமாறன் பகபகவென்று சிரித்தான். "நாகர்களின் தலைவரே! இளநாகரே! இவர்களா குற்றவாளிகள்? இவர்கள் கேவலம் குற்றம் புரிபவர்களுடைய கருவிகள் அல்லவா? குற்றவாளியின் குற்றத்தை அவனையும் வைத்துகொண்டு கொற்றவனிடம் அல்லவா கூறுவது முறை? ஆயினும், உங்களிடம் ஒரு வார்த்தை தனியாகப் பேச விரும்புகிறேன் நான்!" என்று நிமிர்ந்து கம்பீரமாகப் பேசினான் நெடுமாறன்.

இதற்குள் சிங்கராயன் தன் வீரர்களில் ஒருவனைப் பார்த்துக் கண் ஜாடை காட்ட அவன் அருகிலிருந்த அந்த நிலவறையினுள்ளே நழுவிச் சென்றான். அதை நெடுமாறன் கவனித்தானோ கவனிக்கவில்லையோ, இளநாகன் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் மட்டும் என்ன நடந்துவிடப்போகிறது? "வேங்கையாரிடந்தானே போய் சொல்லப் போகிறாய்? முடிந்தால் அவரை இங்கேயே அழைத்துவந்து விடேன்; என்று தான் அவன் கூறிச் சிரித்திருப்பான்.

இளநாகன் சிங்கராயன் பிடரியை உதறி விட்டுவிட்டு, "சரி; வா, உள்ளேயே போய்ப் பேசலாம். உனக்குத் தெரியுமல்லவா—எப்படியோ தப்பித் தவறி, சுலபமாக உள்ளே நுழைந்து வந்துவிட்டாய்! ஆனால் அவ்வளவு சுலபமாக என்னை மீறிக்கொண்டு வெளியில் போய்விட முடியாது. புரிகிறதா?" என்று கூறினான்.

இதற்குள் கோட்டை வாயிலிலிருந்து வேறு ஒரு வீரன் ஓடிவந்து சிங்கராயன் காதருகே குனிந்து எதையோ கூறினான். அதைக் கேட்டதும் சிங்கராயன் முகம் குருதிபோல் சிவந்தது.

அவன் இளநாகனைப் பார்த்து, ''அரசே! அவன் கொலைகாரன். கோட்டைக் காவலாளிகள் இருவரைக் கொன்றுவிட்டு உள்ளே நுழைந்து வந்திருப்பவனை நீங்கள் அழைத்துப் பேசக்கூடாது. அவன் ராஜத்துரோகி!'' என்று உரத்த குரலில் கத்தினான்.

''அதைப்பற்றிச் சற்றுப் பொறுத்துக் கேட்டுக்கொள்கிறேன். கொஞ்சம் பொறு, ஏதோ என்னிடம் சொல்ல வருகிறான். அதைக் கேட்போம் முதலில்!'' என்று கூறிவிட்டு, நெடுமாறனை அழைத்துக்கொண்டு அந்தப்புர மாளிகையினுள் நுழைந்தான் இளநாகன்.

சிங்கராயனுக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது. ஏற்கனவே தன்மீது கோபமுற்றிருக்கும் வேங்கையார் காதுக்கு இந்தச் செய்தியும் எட்டினால் எப்படி இருக்கும் என்பதை அவனால் எண்ணியே பார்க்க முடியவில்லை. தன் நினைவுடனேயே தன் தலை தரையில் புரண்டு உருளுவதுபோன்ற பிரமை அவனுக்கு உண்டாயிற்று. நெடுமாறன் மீது ஏற்பட்ட கோபமெல்லாம் இளநாகன் மீது திரும்பியது. ஒருவரும் அறியாமல் உள்ளே நுழைந்து, இளநாகன் உயிரைப் போக்கிவிடலாமா என்றுகூட அவன் ஆத்திரம் சென்றது. ஆனால் பராக்கிரமும் வீரமும் நிறைந்த நெடுமாறன் அருகில் இருப்பானே என்ற நினைவு வந்ததும் அந்த எண்ணத்தை அந்தக் கணமே விட்டொழித்து விட்டான்.

செங்கணன் யார் என்பதையும் அவன் சிறைப்பட்டு விட்டான் என்பதையும் அவனை மீட்கவே தான் இப்போது வந்திருப்பதாகவும் நெடுமாறன் சொல்லிவிட்டால், அப்புறம் அங்கே என்ன நடக்குமோ என்பதைக் கற்பனை செய்து பார்க்கவே அவனுக்குத் தெம்பு இல்லை. பூமி படாரென்று வெடித்து, எதுவும் விபரீதமாவதற்கு முன்னதாகத் தன்னை விழுங்கிவிடக்கூடாதா என்று ஏங்கியது அவன் உள்ளம்.

ஆனால் அப்படி நினைத்ததெல்லாம் நினைத்த மாத்திரத்தில் நடந்துவிடுகிறதா? நடக்காது என்பதை அறிந்த அவன் மிகவும் கொடிய முடிவுக்கு வந்துவிட்டான். என்ன நேர்ந்தாலும் இனி அதற்காகப் பயந்து சாக அவன் விரும்பவில்லை. இளநாகனும் நெடுமாறனும் சேர்ந்துவிட்டால் அவர்களை எதிர்க்கத் தனக்கோ, தன் வீரர்களுக்கோ திறமை இல்லை என்பதை உணர்ந்த அவன் சட்டென அந்த அந்தப்புர மாளிகையின் திறந்த வாயிலினுள்ளே நுழைந்தான். இடை நிலைக்கருகில் இருட்டான பகுதி இருப்பது அவனுக்குத் தெரியும். அந்த இடத்தில் போய் மறைந்து நின்றுகொண்டான். உருவிய வாளும் ஓங்கிய கையுமாக அவன் அங்கே ஒளிந்திருப்பான் என்பதை அறியாத இளநாகன் அந்த வழியாகத்தானே வெளியேற வேண்டும்? இப்பொழுது நெடுமாறனைவிட இளநாகனே அவனுக்குப் பெரிய எதிரியாகத் தோன்றினான்.

(தொடரும்)



# பெருமை வாய்ந்த பிள்ளையார்

எ.ங.கணபதி

பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்!

ஆற்றங் கரையின் மீதிலே
அரச மரத்தின் அடியிலே

வீற்றி ருக்கும் பிள்ளையார்
வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்!

ஆனை முகம் கொண்டவர்
ஐந்து கைகள் உடையவர்

பானை வயிறு படைத்தவர்
பக்தர் துயர் தீர்ப்பவர்
பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்!

அவல் கடலை சுண்டலும்
அரிசிக் கொழுக் கட்டையும்

கவலை யின்றித் தின்னுவார்
கண்ணை மூடித் தூங்குவார்!
பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்!

ஆறு முக வேலனின்
அண்ண னான பிள்ளையார்!

ரோகம் துன்பம் யாவையும்
நீக்கி வைக்கும் பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்!

மஞ்சளிலே செய்யினும்
மண்ணி னாலே செய்யினும்

அஞ்செழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்!

கலி யுகத்தின் விந்தைகள்
காண வேண்டி அநுதினம்

எலியின் மீது ஏறியே
இஷ்டம் போலச் சுற்றுவார்!
பிள்ளையார் பிள்ளையார்
பெருமை வாய்ந்த பிள்ளையார்!



சுவர்க்கடிகாரம் 'டாண், டாண்' என்று அடிக்கத் தொடங்கிப் பன்னிரண்டு மணியோசைகளுடன் ஒய்ந்தது. கோபாலன் பேனாவைக் கீழே வைத்துவிட்டுத் தலை நிமிர்ந்தான்.






அது பகல் பன்னிரண்டு மணியல்ல, நள்ளிரவு! காலையிலிருந்து ஒய்வில்லாமல் இந்தப் பாழும் கணக்குப் புத்தகத்துடன் போராடிக்கொண்டிருக்கிறான் அவன். சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் படித்த காலத்தில் எத்தனையோ தடவை வீட்டுக் கணக்குப் போடாமல் போய், வாத்தியாரை ஏமாற்றியது கோபாலனுடைய நினைவுக்கு வந்தது. ஆனால் இது வேறு விஷயம். ஏமாற்றுவதோ நொண்டிச் சாக்குகள் சொல்வதோ இந்த முதலாளியிடம் நடக்காது. அவன் மாதம் முப்பது ரூபாய்ச் சம்பளத்துக்குக் குமாஸ்தாவாக உழைத்து ஒடாகிக்கொண்டிருக்கிறான். அவனுடைய வயிற்றைக் கழுவுவதற்கே இந்த வருவாய் போதவில்லை. வேறு நல்ல உத்தியோகம் கிடைப்பதும் துர்லபந்தான். என்ன செய்யலாம்?

உடலை நெளித்துச் சோம்பல் முரித்தான்; விரல்களைச் சொடுக்கினான். ஜன்னல் மூலமாகப் பார்த்தான் கோபாலன். சினிமாப் பார்த்துவிட்டுத் குஷாலாகச் செல்லும் யுவர்கள், கை கோத்து நடக்கும் தம்பதிகள், ஒன்றையொன்று முந்த முயலும் மோட்டார் வண்டிகள் - இவையெல்லாம் அவன் மனத்தில் பொறாமையைக் கிளறின. யாவருக்கும் வாழ்க்கை இன்பமயமாக இருக்கிறது. அவனுக்கு மட்டும்....?

தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வருகிறது. ஆனால் வேலையை முடிக்காமல் தூங்க முடியுமா? ஒரு கோப்பை தேநீர் அருந்தினால் சற்று நேரத்திற்காவது

நித்திரையைத் தடுத்து நிறுத்த லாம். ஆனால் அதற்குத் தேவை யான ஓரணுக் காசு? சம்பளம் வாங்கின மறுநாளே அவனுக்கு 'மாதக் கடைசி'தான்!

பற்களைக் கடித்துக் கொண்டு வேண்டா வெறுப்போடு மீண்டும் பேனாவை எடுத்தான். விரல்கள் எழுதச் சித்தமாகியுங்கூட மூளை வேலை செய்ய மறுத்துவிட்டது. புத்தகத்தை மூடினான், பேனாவை உறையிலிட்டான். அப்போதுதான் எதிரே சுவரில் மாட்டியிருந்த பெரிய படம் அவன் கண்ணிற் பட்டது.

கோபாலனது முதலாளி ராமா னுஜலு நாயுடுவின் புகைப்படம் அது. முறுக்கிய மீசையும் உருட்டி விழிக்கும் கண்களுமாய்த் தத்ரூப மான தோற்றம். அதைப் பார்க் கும்போதே அவனுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. அவ ரோடு நேரில் நாலு வார்த்தைகள் பேசுவதற்குத்தான் தைரியமில்லை. படத்தினிடம் பேசுவதற்கென்ன?

''முதலாளி! நீங்கள் செய்வது அநியாயம்'' என்றான் அவன் வாய் விட்டு. என்ன ஆச்சரியம்! படம் சும்மா இருக்கவில்லை. அதன் கண் களில் ஒரு ஜீவகளை தோன்றிற்று. உதடுகள் ஒரு கணம் துடித்தன. அடுத்த விநாடி படம்-அல்ல-நாயுடு காரு கடகடவென்று சிரித்தார். கோபாலன் நடுங்கிப் போனான்.

நாயுடுகாரு பேசினார்: ''என்ன தம்பி, கோபால், எதை அநியாயம் என்கிறாய்?'' என்று அவரது முதல் கேள்வி கிளம்பிற்று.

கோபாலன் சமாளித்துக் கொண் டது மட்டுமல்ல; எங்கிருந்தோ அவ னுக்குத் தைரியம் வந்துவிட்டது.

''ஏன்? நீங்கள் செய்யும் காரியங் கள் எல்லாமே அக்கிரமமாகத் தான் இருக்கின்றன. கைப்புண் ணுக்குக் கண்ணாடி வேண்டுமா, ஐயா?'' என்றான் அவன் கணீ ரென்ற குரலில். இருவரது கண் களும் நேருக்கு நேராகச் சந்தித் தன.

''என் விஷயத்தில் கண்ணாடி தேவை என்றே வைத்துக் கொள்ள லாம். நீயே அந்தக் கண்ணாடியாக இருந்து விவரமாகச் சொல்லு.''

''சொல்கிறேன் ஐயா, சொல் கிறேன். முதன் முதலாக நீங்கள் வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடித்து ஏழைகளைச் சுரண்டுவதை நினைவுக்குக் கொண்டு வாருங்கள்.''

''உம். . அப்புறம்?''

''உம்மை நம்பி முதல் போட்ட பங்காளி ராமசாமி முதலியாருக்கு லாபத்தைக் குறைத்துக் காண் பித்து நாமம் சாற்றுகிறீர்களே; இது நம்பிக்கைத் துரோகம்.''

''ஓஹோ! . . அடுத்தபடி?''

''வருமான வரியை ஒழுங்காகக் கொடாமல் அரசாங்கத்தின் கண் களில் மண்ணைத் தூவுகிறீர்கள். இது நாட்டுக்கே துரோகம்.''

''சரி, இவ்வளவுதானா, இன்னும் ஏதாவது உண்டா?'' என்று நாயுடு காரு கர்ஜித்தார். கோபாலனா அஞ்சுவான்? ஒரு கற்பாறையின் உறுதியுடனல்லவா நின்று பேசிக் கொண்டிருந்தான் அவன்?

''இருக்கிறது, முதலாளி இருக் கிறது. நீங்கள் குறிப்பாக எனக் குச் செய்யும் அநியாயந்தானே எல்லாவற்றையும்விடப் பெரியது? அதைச் சொல்லாமல் முடித்து விடுவேனா என்ன? இரவு பகலென்று பாராமல் உங்களுக்காகச் செக்கு மாடு போல உழைத்து வருகிறேன் நான். இதற்கு மூக்கால் அழுது கொண்டு மாதம் முப்பது ரூபாய்ப் படியளக்கிறீர்கள். இந்தச் சம்ப ளம் என் வயிற்றைக் கழுவவே போதவில்லை. இதில் நாலு பேரைப்போல நானும் கல்யாணம் செய்து கொண்டு நிம்மதியாக வாழ்வது எப்படி?''

கோபத்தின் உச்சநிலையை அடைந்த நாயுடுகாரு 'குபீரெ'ன்று சிரித்துவிட்டார்! கோபாலனுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

''முதலாளி, சிரித்தது போதும். பல் சுளுக்கிக் கொண்டுவிடப் போகிறது'' என்றான் அவன். ஆனா லும் அந்தச் சிரிப்பு ஒன்றும் அத் தனை எளிதில் 'பிரேக்' போட்டு நிறுத்திவிடக் கூடியதாக இல்லை. அது மெதுவாகத்தான் ஓய்ந்தது.

''என்ன சொன்னாய், கோபாலா? நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்றா?'' என்று கேட்ட

நாயுடுகாரு, மீண்டும் பொங்கி வர முயன்ற சிரிப்புடன் போராடினார்.

"ஆம். அப்படித்தான் சொன்னேன். அதற்கு இவ்வளவு பரிகாசம் ஏன்? பிச்சைக்காரர்கள் கூடத் தம்பதிகளாகத்தான் திரிகிறார்கள்!"

"அது வாஸ்தவம். ஆனால் ஜெயிலுக்குப் போகிறவர்களும் மனைவியுடன் போக முடியுமா?" நாயுடு காருவின் கண்களில் கொடுமை மினுமினுத்தது.

"ஜெயிலுக்கா? யார் போவது அங்கே?" என்று குழறினான் கோபாலன்.

இரண்டு வருஷங்களாக இங்கே வேலை பார்த்து வரும் உனக்கு இப்போதுதான் நான் செய்வது அநியாயம் என்ற ஞானோதயம் வந்ததா? இதற்குப் பதில் சொல்லு" என்று அவர் கர்ஜித்தார். கோபாலனது இதயத்தில் ஒரு பதைபதைப்புத் தோன்றிற்று. என்றாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவன் கேட்டான்.

"நான் பேசியது முற்றிலும் முறையல்ல என்ற வைத்துக் கொள்வோம். அதற்காக நீங்கள் என்னை வேலையை விட்டுத் தள்ளலாமேயன்றி ஜெயிலுக்கு அனுப்பிவிட முடியுமா? சும்மா மிரட்டாதீர்கள், ஐயா!"

"கோபாலா! உன்னைப் போன்ற முட்டாள்களை மிரட்டுவதில் பயனில்லை. தயங்காமல் தண்டனை கொடுக்கத்தான் வேண்டும். இதோ, கடைசி வார்த்தையாகச் சொல்கிறேன். நீ பேசியது தவறு என்று மன்னிப்புக் கேள்."

"இல்லாவிட்டால்...?"

"அரைமணி நேரத்துக்குள்ளாக நீ கம்பி எண்ணிக்கொண்டிருப்பாய். பிறகு கடவுளே வந்தாலும் உன்னைக் காப்பாற்ற முடியாதபடி கேஸ் ஜோடித்து விடுவேன்!"

"உங்களால் முடிந்ததைச் செய்து கொள்ளுங்கள்" என்றான் கோபாலன்.

"ஓஹோ, அப்படியா?" நாயுடு காரு டெலிபோனைக் கையிலெடுத்து, 'டயல்' செய்தார். "யாரது? போலீஸ் இன்ஸ்பெக்டரா?.. இங்கே ஓர் அவசரக் கேஸ்! என் குமாஸ்தா கோபாலன் ஆபீஸ் பணத்தில் ஆயிரம் ரூபாயைக் கையாடி விட்டான். உடனே வந்து அவனைக் கைது செய்து போங்கள்."

நாயுடுகாரு சம்பாஷணையை முடிக்கக்கூட இல்லை. கோபாலன் ருத்ராகாரமாகி விட்டான். இந்த அநியாயம், அபாண்டத்தை அவனால் எப்படிப் பொறுக்க முடியும்? 'பழிக்குப் பழி' என்று அவனுள்ளம் துடித்தது. "அடே பாவி! உன்னைக் கொல்லாமல் விடுவதில்லை!" என்ற கூச்சலுடன் முன்னால் பாய்ந்தான். அவன் கையிலிருந்த கெட்டியான ரூல் தடி பயங்கரமாகச் சுழன்றது.

'பட்! படார்!!' கண்ணாடி நொறுங்கும் ஓசை. சிதறிய துண்டுகள் கோபா



லன்மீது விழுந்து மண்ணைக் கௌவின. அவன் மரம் போல் நின்ருன்.

என்ன ஆச்சரியம்! கோபாலன் கண்டதெல்லாம் கனவு; ஆனால் படம் உடைந்து நொறுங்கியது மட்டும் உண்மை! இந்த இரவு இரண்டு மணி வேளையில்..!

தலையில் ஓங்கி நாலு அடி போட்டுக் கொண்டான் அவன். முடிவு பெருத கணக்கு ஒரு புறம் இருக்கட்டும். காலையில் முதலாளி ஆபீசுக்கு வந்தால் படம் எப்படி உடைந்தது என்றல்லவா முதலில் விசாரிப்பார்! அவருக்கு என்ன பதில் சொல்வது?

கோபாலன் குனிந்து கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கத் தொடங்கினான். இது ஒன்றுதான் இப்போதைக்கு அவனால் செய்ய முடிந்த காரியம்.

'தடதட' வென்று யாரோ கதவைத் தட்டினார்கள். அவன் திடுக்கிட்டுத் திரும்பினான். "கோபாலா, கோபாலா!' என்று கூப்பிடும் குரலும் காதில் விழுந்தது. சந்தேகமில்லாமல் அது முதலாளியின் குரல்தான்! அவன் முகம் வெளுத்தது. அவர் ஏன் இப்படி இரவு நேரத்தில்..?

என்ன செய்யலாம்? துரதிருஷ்டம் வந்தால் சொல்லிக் கொண்டா வருகிறது? ஏதோ ஒரு வழியாக மனத்தைத் தேற்றிக் கொண்டு போய்க் கோபாலன் கதவைத் திறந்தான்.

அங்கே நின்றது முதலாளி ராமானுஜலு நாயுடுதான். ஆனாலும் அவரது முகத்தோற்றத்தில் எத்தகைய மாறுதல்! சாந்தமும் அன்புமே உருவெடுத்து வந்தாற் போல் அல்லவா அவர் காட்சிதந்தார்! "அப்பா, கோபாலா!" என்றழைத்த போது அவர் குரலில் தேன் ஒழுகியது. நொறுங்கிக் கிடந்த கண்ணாடித் துகள்களைப் பார்த்தார்;

"என்ன தம்பி, நடந்தது இங்கே?" என்று புன்னகையுடன் கேட்டார் நாயுடுகாரு. உண்மை பூராவும் அவருக்கு ஏற்கெனவே தெரியும் போல அந்தக் கண்களில் ஒரு குறும்பு தாண்டவமாடிற்று.

"ஓர் கனுக் கண்டேன் ஐயா.." என்று தயக்கத்துடன் கோபாலன் ஆரம்பித்தான்.

"நானுந்தான் கண்டேன்..உம், அப்புறம் சொல்லு. இந்தப் படம் எப்படி உடைந்தது?"

"கனவில் யாரையோ தாக்குகிற ஞாபகம்-ரூல் தடியை எடுத்து விட்டெறிந்தேன், ஐயா! அது குறி தவறி...."

"நில்லு, கோபாலா. உன் குறி தவறவில்லையென்று எனக்குத் தெரியும். நீ தாக்க எண்ணியது என்னைத்தான். உன் கனவில் என் படமே நானாகத் தோன்றியது, இல்லையா?"

அவன் திருதிருவென்று விழித்தான். நாயுடுகாரு நெருங்கி வந்து அவன் முதுகில் ஆதரவோடு தட்டிக் கொடுத்தார்.

"தம்பி, உனக்கு அத்தனை ஆவேசம் வந்தது நியாயந்தான். நான் போலீசுக்குப் போன் செய்து உன்மீது பொய்க் குற்றம் சாட்ட முயன்றது தவறு. நீ ரூல் தடியை வீசும் கட்டத்தில்தான் என் கனவும் கலைந்தது. கண் விழித்ததும் எழுந்து காரைப் போட்டுக் கொண்டு ஓடி வந்தேன்.."

கோபாலன் தன் காதுகளையே நம்பவில்லை. விந்தையிலும் விந்தையான சம்பவமல்லவா இது? இருவரும் ஒரே சமயத்தில் ஒரே கனவைக் கண்டிருக்கிறார்கள்! பேசப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றையும் தெளிவாக நினைவில் வைத்திருக்கிறார்கள்!

நாயுடுகாரு பேசிக் கொண்டு போனார்: "..மொத்தத்தில் இந்தக் கனவு என் கண்களைத் திறந்தது. உன் அருமையான சேவையைப் பாராட்டுகிறேன். உன் தேவைகளைப் பூர்த்தி செய்வதால் எனது செல்வம் குறைந்து விடப் போவதில்லை. இன்று முதல் உன் சம்பளம் மாதம் நூறு ரூபாய். நீ மணம் புரிந்துகொண்டு ஆனந்தமாக வாழலாம்."

கோபாலன் நாயுடுகாருவின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தான். இந்த விசித்திரக் கனவு அவன் வாழ்க்கையின் போக்கையே மாற்றி விட்டது!



# சுதந்தரப் பறவை

சுகந்தன்

''கண்ணா, உன்னை அம்மா சாப்பிடக் கூப்பிடறா!''

''நீ?''

''நான் சாப்பிட்டுவிட்டேன்.''

கண்ணனின் விழிகளில் நீர் திரையிட்டது. ரமாவின் போக்கு அவன் உள்ளத்தை வாட்டியது. அவனும் பட்டணத்துக்கு வந்த நாளாகப் பார்க்கிறான், ரமா அவனைவிட்டு எப்பொழுதும் விலகியே செல்கிறாள். உள்ளம் நிறைந்த அன்புடன் கண்ணனையே வளைய வளையச் சுற்றிவரும் ரமா இப்பொழுது அவனுடன் சரியாகப் பேசுவதே யில்லை.

அவனைக் கூப்பிடாமலே அவள் சாப்பிட்டு விடுகிறாள். விளையாடும் போதெல்லாம் பக்கத்து வீட்டுச் சுமதியைத்தான் கூப்பிடுகிறாள். வெளியே போனால்கூட சுமதியைத்

தான் அழைக்கிருள். எதற்குமே அவள் கண்ணனை அழைப்பதில்லை.

ரமாவுடன் பட்டணத்தைச் சுற்றலாம், ரமாவுடன் விளையாடலாம் என்று விடுமுறை நாட்களில் பட்டணத்துக்கு வந்த கண்ணனுக்கு ரமாவின் போக்கு ஏமாற்றத்தை அளித்தது. அவன் உள்ளத்தில் துயரம் நிறைந்தது. முன்பு கண்ணனுடன் குறும்பாகவும் வேடிக்கையாகவும் பொழுது போக்காகவும் பேசும் ரமா இப்பொழுது அவசியமானால்கூட அளவிட்டுப் பேசுகிருள்.

ரமாவின் போக்கு ஏன் இப்படி மாறிவிட்டது என்று கண்ணனுக்குப் புரியாமலில்லை. ஒரு மாதத்திற்கு முன் நடந்த அந்த நிகழ்ச்சியிலிருந்துதான் ரமா இப்படி மாறிவிட்டாள் என்பதை அவன் உள்ளம் உணர்த்தியது. என்ன இருந்தாலும், எப்பொழுதோ நடந்ததை எண்ணி இப்படி மாறிவிடுவாள் ரமா என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

கிராமத்திற்கு வரும்போதெல்லாம் ரமாவின் உள்ளம் பூரிப்படையும். கண்ணனைக் காணப் போகிறோம் என்ற ஆவல் உணர்ச்சியிலே பொங்கி வழியும். கண்ணனுக்கும் அப்படித்தான். பட்டணத்திலிருந்து ரமா வருகிருள் என்றால் அவன் மனத்திலே இன்பம் அலைமோதும். ரமா என்ன வாங்கி வருவாளோ, என்னென்ன கதைகள் சொல்வாளோ என்றெல்லாம் அவன் மனம் கற்பனையில் மூழ்கும். ஒரு கிளைப் பறவைகளாக அவ்விரண்டு உள்ளங்களும் சிறகடித்துப் பறக்கும்.

கிராமத்தின் எழிலையெல்லாம் கண்ணன் அவளுக்குக் காட்டுவான். கிராமத்தின் இயற்கையழகைக் காணும்போது, ''பட்டணத்தை விட கிராமம் எவ்வளவு அழகாக இருக்கிறது. கண்ணன் கொடுத்து வைத்தவன்தான்!'' என்று ரமாவின் உள்ளம் எண்ணும்.

ஆனால் கண்ணனுக்கோ, ''கிராமத்தைவிடப் பட்டணம் எவ்வளவு பெரிதாக இருக்கிறது..! எவ்வளவு நாகரிகமாக இருக்கிறது! எங்கே பார்த்தாலும் புதுமையாக இருக்கிறது! ரமா அதிருஷ்டசாலிதான்; நல்ல வேளை சிற்றப்பாவாவது - (ரமாவின் அப்பா) - பட்டணத்தில் இருக்கிருரே, அப்பாவைப்போல் பட்டிக்காட்டில் வசிக்காமல்!'' என்று தோன்றும்.

ஒட்டுச் செடி போன்ற அவ்விரு பிஞ்சு உள்ளங்களுக்குமிடையே சிறு சிறு கோபம் மட்டும் அடிக்கடி எழுந்து மறையும். ஏதாவது சிறு பிளவு வந்துவிட்டால் சிறிதுநேரம் 'டு' விட்டுக் கொள்வார்கள், பிறகு கொஞ்ச நேரத்தில், நீர்க்குமிழி கொப்புளித்து நொடியில் மறைவதுபோல், அவர்கள் கோபமும் மறைந்துவிடும்.

ஆனால் கண்ணனிடம் உள்ள ஒரே ஒரு பழக்கம் மட்டும் ரமாவிற்குக் கொஞ்சங்கூடப் பிடிப்பதில்லை. பட்டுப்பூச்சி, பொன் வண்டு போன்ற பூச்சிகளைக் கண்டால் கண்ணன் விடமாட்டான். அவைகளைப் பிடித்து விளையாடுவதிலே அவனுக்கு ஒரு தனி ஆர்வம். பச்சைக் கிளி, சிட்டுக் குருவி போன்ற பறவைகளைப் பிடித்துக் கூண்டிலே அடைத்து வைப்பான். கூண்டிலே அவை படும் வேதனையை அந்தப் பிஞ்சு மனம் எப்படி உணரும்?

இரண்டு வயசு குறைவானாலும் ரமாவின் உள்ளம் பறவைகளின் துன்பத்தை உணர்ந்திருந்தது. காந்தி, புத்தர் சொன்ன கருணை வழி அவள் மனத்திலே இனித்து நின்றது. ''பறவைகளைப் பிடித்துத் தொந்தரவு செய்யாதே!'' என்று கண்ணனிடம் அடிக்கடி சொல்லியிருக்கிருள். ஆனால் அவன் கேட்டால்தானே!

கண்ணனின் அறையிலே தொங்கவிடப்பட்டிருக்கும் கிளிக்கூண்டைப் பார்க்கும்போது ரமாவின் உள்ளத்தில் பரிதாபம் மேலிடும். வானவீதியில் தன்னினத்தோடு சுதந்தரமாகச் சுற்றித் திரிய வேண்டிய பச்சைக் கிளி கூண்டிலே அடைப்பட்டுக் கிடக்கிறதே என்று உள்ளம் வருந்துவாள். கண்ணன் இல்லாத சமயத்தில் கூண்டைத் திறந்துக் கிளிகளை விடுவித்துவிடலாமா என்றுகூட நினைப்பாள். ஆனால் அப்படிச் செய்தால்

கண்ணன் பகைத்துக் கொள்வானே! 'பறவைகளைத் துன்புறுத்தாதே!' என்று சொன்னால்கூடக் கண்ணனுக்கு ஆத்திரம் பொங்கிவரும். அவன் ஆசையோடு அடைத்து வைத்திருக்கும் கிளிகளைத் திறந்துவிட்டால் அவனுடைய கோபத்திற்கு எல்லை இருக்குமா?

இப்படித்தான் ஒரு மாதத்திற்கு முன் அவள் கிராமத்திற்கு வந்திருந்தபோது, இரண்டு சிட்டுக் குருவிகள் கூண்டிலே அடைபட்டு, கண்ணனின் அறையிலே தொங்குவதைப் பார்த்தாள். அவை வெளியிலே பறக்க முடியாமல் தத்தளித்தன. ரமாவின் மனம் இளகியது. உள்ளுக்குள்ளே அவள் கண்ணனை வெறுத்தாள்.



கூண்டுக் குருவிகளின் வேதனையைப் பார்க்கும்போது ரமாவின் உள்ளம் பரிதவித்தது. "கண்ணன் பகைத்துக்கொண்டால் கூடச் சரிதான், குருவிகளை விடுவித்து விடுவது!" என்று தீர்மானித்தாள். அவள் நெஞ்சிலே துணிவு மலர்ந்தது. கண்ணன் இல்லாத நேரத்தில் குருவிகளை விடுவித்துவிட்டாள்.

வெளியே சென்றிருந்த கண்ணன் வீடு வந்தபோது வெற்றுக் கூடு அவன் காட்சிக்கு நின்றது. அவ்வளவுதான்; கண்ணனின் மனம் குமுறியது. ஆத்திரம் அதில் பொங்கியது. வீடே அதிர, "யார் என் குருவியை எடுத்தது?" என்று கர்ஜித்தான். அவன் சந்தேகமெல்லாம் ரமாவின்மேல்தான்.

கண்ணனுக்கு இவ்வளவு ஆத்திரம் வருமென்று ரமா எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும், தைரியத்தை விடாது, "ஏன், நான்தான் அவைகளை வானவீதியில் பறக்கவிட்டேன்!" என்றாள். கண்ணனின் கோபம் அதிகமாகியது. ரமாவின்மேல் அவனுக்கு ஏற்கனவே சந்தேகம். அவனுக்கு உள்ளம் பொங்கியது. அவன் கைகள் துடித்தன. மறுநிமிடம் ரமாவின் சிவந்த கன்னங்கள் மேலும் சிவந்தன. "திமிரைப் பார்! திமிரை!" கண்ணனின் வாயிலிருந்து வார்த்தைகள் வெடித்தன.

ரமா சத்தமிட்டு அழவில்லை. கண்களிலே நீர் நிறைய, கண்ணனையே வெறித்துப் பார்த்தாள். கண்ணனின் இடி குரலைக் கேட்டு அடுக்களையிலிருந்து ஓடிவந்த கண்ணனின் அம்மா, அவனைத் திட்டிவிட்டு ரமாவை அன்புடன் அணைத்துச் சென்றாள்.

அதற்கப்புறம் ரமா அவனுடன் சரியாகப் பேசவேயில்லை. இன்னும் சொல்லப் போனால், அந்த நிகழ்ச்சிக்கப்புறம் இரண்டு நாளிலேயே அவள் பட்டணம் சென்றுவிட்டாள். எப்பொழுதும்போல் அவள் கோபம் நீர்க் குமிழியாகி

விடும் என்றுதான் நினைத்தான் கண்ணன். ஆனால் அது அவள் நெஞ்சிலே வைரமாகிவிட்டதே!

கண்ணனின் பழைய நினைவிற்கிடையே மாலை நேரம் பூத்தது. அருணனின் தங்க மழையில் ரமாவும் சுமதியும் தெரு வாயிலில் 'ஸ்கிப்பிங்' விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் கண்ணனோ, கன்னங்களில் கையூன்றிய வண்ணம் திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அவர்கள் விளையாடுவதைப் பார்க்கப் பார்க்க அவன் உள்ளத்திலே ஏக்கம் நிறைந்தது. தானும் அவர்களோடு விளையாட முடியவில்லையே என்று நினைத்தபோது அவன் நெஞ்சம் விம்மியது.

தன்னினமெல்லாம் வானத்திலே வட்டமிட, தான்மட்டும் கூண்டிலே அடைபட்டுக் கிடந்தால் எப்படியிருக்கும்?—கண்ணனின் மன வேதனையை உணர்ந்து ரமா அவனை விளையாட அழைப்பாளா? கண்ணனின் பிஞ்சு மனம் கூண்டுக் கிளியைப்போல் தத்தளித்தது.

''பச்சைக் கிளி! பச்சைக் கிளி!'' தெருவில் குரல் கேட்டுச் சிந்தனையிலிருந்து விடுபட்ட கண்ணன் திடுக்கிட்டுப் பார்த்தான். தெருவிலே யாரோ ஒரு கிழவன், ''பச்சைக் கிளி! பச்சைக் கிளி!'' என்று கூவிக்கொண்டிருந்தான். அவன் கையிலிருந்த கூண்டிலே நான்கு பச்சைக் கிளிகள் அடைபட்டுக் கிடந்தன.

பச்சைக் கிளிகளைக் கண்டதும் அவன் உள்ளத்திலே ஒருவித சபலம் தோன்றியது. பிறகு சில நொடிகளில் அது மறைந்து அவன் வதனத்தில் புன்னகை அரும்பி நின்றது. உள்ளத்தில் உவகை பூக்க, கிழவனை விளித்து, ''நான்கு கிளிகளும் கூண்டோடு என்ன விலை?'' என்று கேட்டான். கிழவன், ''மூன்று ரூபாய்'' என்று பதில் சொன்னான்.

கிழவனை அங்கேயே இருத்திவிட்டு உள்ளே ஓடினான் கண்ணன். பெட்டியைத் திறந்து, பட்டணம் வரும்போது அவன் அம்மா கொடுத்த ஐந்து ரூபாயில் மூன்று ரூபாயை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். மறுநிமிடம் பணம் கிழவன் கைக்குச் சென்றது. கிளிக்கூண்டு கண்ணன் கைக்கு வந்தது.

விளையாடுவதை நிறுத்திவிட்டு, கண்ணன் என்ன செய்கிறான் என்பதையே பார்த்துக்கொண்டிருந்த ரமாவிற்கும் சுமதிக்கும் உள்ளுக்குள் சினம் பொங்கியது. ''பாவம்! இந்தக் கிளிகளை என்ன செய்ய வாங்கினானோ!'' என்று அவர்கள் மனம் வருந்தினார்கள்.

''பாவி! நீ எப்படியாவது போ! கடவுள்தான் உன்னைக் கேட்கவேணும்'' என்பதுபோல் அவனை வெறுப்புடன் பார்த்துவிட்டு மீண்டும் அவர்கள் விளையாட்டில் மூழ்கினார்கள்.

''ரமா! இங்கே வாயேன்!'' முகத்திலே மகிழ்ச்சி பொங்க ரமாவை விளித்தான் கண்ணன்.

ரமாவும் சுமதியும் ஆட்டத்தை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தார்கள்.

''ரமா! இங்கே வாயேன் கிளிகளைப் பறக்கவிடலாம்!'' கண்ணன் மீண்டும் அவர்களை அழைத்தான். இல்லை, கண்ணனின் திருந்திய உள்ளம் அவர்களை மறுபடியும் அழைத்தது.

ரமாவிற்கு வியப்புத் தாங்கவில்லை.

மறுநிமிடம் சுமதியை இழுத்துக்கொண்டு கண்ணனிடம் ஓடினாள். மூவரும் கிளிகளைப் பறக்கவிட்டனர். அந்த முகங்களில்தான் எத்தனை மலர்ச்சி!

ஆகாயத்தில் பறந்துகொண்டிருந்த பச்சைக் கிளிகள் ஆனந்த ஆரவாரம் செய்தன. ''நாங்கள் சுதந்தரப் பறவைகளாகி விட்டோம்!'' என்பதை அந்தக் குரல்கள் தெரிவித்தன.

''நாங்களும் இன்றுமுதல் உங்களைப்போல் சுதந்தரப் பறவைகள் தான்'' என்பதுபோல் ரமா, சுமதி, கண்ணன் மூவரும் சேர்ந்து விளையாடச் சென்றனர்.




# மாயக் குரல்!

**தங்கமணி**

பண்டைக் காலத்திலே, ஒரு நாள்—

"ஓகோய்ய்..! யாரங்கே..?" அமைதி சூழ்ந்த நள்ளிரவிலே, திடீரென்று வெடித்துக் கிடுகிடாய்த்தது ஒரு குரல், கரடு முரடான பயங்கரக் குரல்!

பைந் தமிழ் நாட்டுக்குத் தெற்கே, வெகு தூரத்தில், 'தொன்று முதிர்க் கடல்' என்னும் கருங்கடல் நடுவிலே, ஒரு சிறு தீவு. 'ஊழி நாடு' என்னும் அந்தத் தீவிலுள்ள சிற்றூருக்கு நடுவில், குறுகலான பாதையில் மெதுவாக நடந்துகொண்டிருந்தான் ஒரு சிறுவன்.

"ஓகோய்..! நில்! நில்! யார் நீ..?"

பின்புறத்திலிருந்து இரண்டாவது தடவையாகக் கிளம்பிய அந்தப் பூகம்பக் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டான். இடையிலிருந்த உடைவாளைச் சற்றே உருவியவாறு, சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

இரண்டு வீரர்கள்—மலைகளையும் மரங்களையும் அநாயாசமாகத் தூக்கி யெறிந்துப் பந்தாடிய பீமனைப்போன்ற இரண்டு வீரர்கள்—உருவிய வாளும், எரிகிற தீவட்டியுமாக ஊர்க் காவல் புரியும் இரண்டு வீரர்கள்—அந்த அழகிய சிறுவனைப் பரபரப்புடன் அணுகினார்கள். "ஏய்! யார் நீ..?" என்று உறுமியவாறே, தனது இராவண மீசையை முறுக்கிவிட்டான் ஒருவன்.

முகத்தில் சலனமிட்ட புன்னகையை மறைத்துக்கொண்டு, அந்த இளைஞன் கம்பீரமாகச் சொன்னான்: "ஐயா, நான் செந்தமிழ் நாட்டு முத்து வணிகன். யவனர் நாடு, அவுணர் நாடு, அரக்கர் நாடு, நிருதர் நாடு முதலிய பல நாடுகளுக்கும் சென்றோம். அறுநூறு பேர்கொண்ட ஏழு தனவணிகக் குழுவினரும் தாரணி, காமினி, ஊர்த்துவம், மந்தாகினி, சுவர்ணமுகி, கங்கம், பொன்னிக் கயல் என்னும் மாபெரும் மரக்கலங்களில் சென்றோம். வாணிபம் புரிந்துவிட்டுத் தாய்நாட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தோம். திடீரென்று எத்திசையிலிருந்தோ சீறி வந்த எமப் புயல், எங்கள் கலங்களை உடைத்துச் சிதைத்துவிட்டது! கணக்கு வழக்கற்ற பொன்னும் பொருளும் வெறி கடலில் பறி போயின! வணிகர்கள்-ஐயோ, அவர்கள் என்னவானார்களோ! நான் மட்டும் எப்படியோ உயிர் மீண்டு, இந்தத் தீவுக்கு வந்து சேர்ந்தேன்."

அந்தச் சிறுவனின் சோகக் கதையைக் கேட்டு, வீரர்கள் இருவரும் பரிதாபப்பட்டார்கள்.

சிறுவன் மனத்துக்குள் சிரித்துக் கொண்டே, சும்மாவாவது அழுதான். தேம்பினுன். கண்ணைக் கசக்கினுன்!..

அந்தச் சமயத்தில் 'களுக்' என்று யாரோ சிரித்தார்கள். ஆமாம், வீரர்களும் சிரிக்கவில்லை. அந்தச் சிறுவனும் சிரிக்கவில்லை. மூவருக்கும் அருகிலிருந்து, யாரோ சிரித்தார்கள். மாயச் சிரிப்பு!..

''யார் சிரித்தது..?'' அப்படியும் இப்படியுமாகப் பரபரப்புடன் பார்த்து விழித்தனர் வீரர்கள்.

''யாரும் சிரிக்கவில்லை. தலைக்கு மேலே, ஏதோ ஒரு குருவிதான் கூவிக்கொண்டு பறந்தது...'' என்ருன் சிறுவன்.

''ஆமாம், ஆமாம்..இந்தத் தீவிலே அழுங் குருவி, சிரிக்குங் குருவி, ஊதுங் குருவி, மத்தளக் குருவி எல்லாம் உண்டு..'' என்ருன் ஒரு வீரன்.

''ஆமாம், சிரிக்குங் குருவிதான் சிரித்துவிட்டுப் போயிருக்கும். தம்பீ!..நீ உனது தந்தைக்கு மூத்த பிள்ளைதானே..?'' என்ருன் மற்ருெரு வீரன்.

''ஆமாம், நான் என் தந்தைக்கு ஒரே ஒரு மகன்தான்!..''

''ஐயையோ!..குழந்தாய், இரவு முடிவதற்குள், பொழுது விடிவதற்குள், நீ இந்தத் தீவைவிட்டு ஓடி விடு! பதினெட்டு வயதுக்கு உட்பட்ட நூற்றுக்கணக்கான தலைப் பிள்ளைகள் திடீர் திடீரென மறைந்து விடுகிருர்கள்; உடனே ஓடி உயிர் தப்பிவிடு..'' என்று பச்சாத்தாபத்துடன் பதறினுன், தாடிக்கார வீரன்.

''ஐயா, நான் இப்போதே இந்தத் தீவைவிட்டு ஓடி விடுகிறேன். ஆனுல், ஒன்று மட்டும் கூறி விடுங்கள். காணுமற் போயிருக்கும் நூற்றுக் கணக்கான தலைப் பிள்ளைகளை அபகரித்துக் சென்றது யார்..? ஏன்..?'' என்று துடிதுடிப்போடு கேட்டான் சிறுவன்.

''அதுதானே மர்மமாக இருக்கிறது..! இந்த ஊழி நாட்டு வேந்தர் உக்கிரவன்மர்கூட எவ்வளவோ முயற்சிக்கிருர். அந்த மர்மத்தைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை!..'' என்று கூறியவாறே, இடையில் தொங்கிக் கொண்டிருந்த சுரைக் குடுவையை எடுத்துத் தீவட்டியில் கொஞ்சம் எண்ணெயை ஊற்றினுன் தாடி வீரன்.

உடனே, ''ஐயா, என் உயிரைக் காப்பாற்றிய உங்களுக்கு என் நன்றி! நான் வருகிறேன்..'' என்று அந்த இரு வீரர்களிடமும் விடை பெற்றுக்கொண்டு, அங்கிருந்து விரைந்தான் சிறுவன். 'இந்தத் தீவின் மன்னனைக் காலையில் பேட்டி காண வேண்டும். இந்த அக்கிரமத்துக்குக் கூடிய சீக்கிரம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்!..'' என்று ஏதோ பேசியவாறே, அந்தச் சிறுவனைத் தொடர்ந்து சென்றது ஒரு மாயக் குரல்!..

* * *

இரவின் கடைசி ஜாமம். 'சர சர' வென்று பனி மழை கொட்டிக் கொண்டிருந்தது. மப்பும் மந்தாரமுமாய்க் கிடந்த கீழ் வானில், விடிவெள்ளி மங்கலான ஒளியுடன் முளைத்தது. எனினும், கவ்விக் கிடந்த கருக்கிருள் இன்னும் வெளுக்கவில்லை!..

நகரின் எல்லைக் கோடியிலே, தீவின் கடற்கரையைச் சுற்றி வளைத்தாற்போல் வானளாவ உயர்ந்த மாமலைகளின் அடிவாரத்திலே, அடர்ந்து பரவிய சந்தனக் காடு. அந்தச் சந்தனக் காட்டுக்கு நடுவிலே ஒரு பெரிய பிரும்மாண்டமான மாளிகை, ஊழித் தீவை ஆளும் உக்கிரவன்ம அரசனின் உல்லாச மாளிகை. அந்த மாளிகைக்கு எதிர்ப் பக்கத்தில் ஒரு பளிங்குத் தடாகம். அந்தத் தடாகக் கரையில், தன்னந் தனியாகத் தலை விரிகோலமாக அமர்ந்து அழுதுகொண்டிருந்தாள் ஒரு தாய். ஒப்பாரி வைத்து,

உயிரும் உடலும் குலுங்க, 'ஓ' வென புலம்பிக்கொண் டிருந்தாள்!

"தாயே, அரண்மனை எதிரில் அமர்ந்து ஏனம்மா அழுகிறாய்..?" என்று அன்புடன் கேட்டான் சிறுவன்.

"என் அருமை மகன், உயிருக்கு உயிரான என் ஒரே ஒரு மகன், நாலைந்து நாட்களுக்கு முன்னே, இந்தச் சந்தனக் காட்டுக்கு விளையாட வந்தான். வந்தவன், வந்தவன்தான்—மீண்டும் வீடு திரும்பவே இல்லை. அரசரிடம் முறையிட்டுக்கொள்ளலாம் என்று இரண்டு மூன்று நாட்களாக அழுதுகொண்டிருக்கிறேன்."

சிறுவனின் நெஞ்சில் துக்கம் புரண்டது. அவன் அந்த அம்மாளுக்குப் பலவிதமாக ஆறுதலும் தேறுதலும் கூறிவிட்டு, அரண்மனையை நோக்கி விரைந்தான்.

சிறுவன் மாளிகையை அடைந்தான். உள்ளிருந்து குமுறி யெழுந்தது ஒரு பயங்கரக் குரல்: "யார் நீ..?"

சிறுவன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். எதிர்பாராவிதமாக அங்கே வந்த அரசர், சிறுவனைப் பார்த்தார். வெறிக்க வெறிக்கப் பார்த்தார். என்னவோ சிந்தித்தார். பிறகு, 'யார்?' என்று கேட்கவில்லை. 'எந்த ஊர்?' என்று விசாரிக்கவில்லை. அந்த அழகிய சிறுவனைப் புன்னகையுடன் மாளிகைக்குள் அழைத்துச் சென்றார். அறுசுவை விருந்து, ஆடல், பாடல் எல்லாம் அதிவிமரிசையாக நடந்து முடிவதற்குள், சூரியன் மேற்கு வானத்தில் உதிர்ந்து விட்டான்!..

இரவின் முதல் ஜாமம். மலர்ந்த நிலா. குளிர்ந்த தென்றல். அரண்மனைக்குப் பின்புறத்திலுள்ள அழகே உருவான அற்புத நந்தவனத்தில், அரசனும் சிறுவனும் அன்பாகப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

"தம்பி, உன் பேர் என்ன..? உனக்கு அண்ணன் இருக்கிறானா..?" என்றார் அரசர்.

"என் பெயர் சோழ விநோதன். எனக்கு அண்ணன், அக்காள் யாருமில்லை. என் தந்தைக்கு நான்தான் மூத்த பிள்ளை..." என்று ஏதேதோ உளறினான் சோழ விநோதன் என்ற அந்தப் பொல்லாச் சிறுவன்.

"மிகவும் சந்தோஷம்!.. விநோதா! நான் வெகு காலமாகப் பாடுபட்டுச் சேகரித்திருக்கும் அதிசயப் பொருள்களை யெல்லாம், இப்போது உனக்குக் காட்டப்போகிறேன்!.. வா, போய்ப் பார்க்கலாம்.." மன்னர் உக்கிரவன்மர் சோழ விநோதனை அழைத்துக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்.

சற்றுத் தூரத்திற்கு அப்பால், நந்தவனத்துக்கு நடுவிலே ஒரு சிங்கார மண்டபம். மன்னர், சோழ விநோதனை அழைத்துக் கொண்டு மண்டபத்திற்குள் நுழைந்தார். அங்கொரு மூலையிலிருந்த மர்மக் கதவைத் திறந்து, பூமிக்கு அடியிருந்த சுரங்கப் பாதையில் இறங்கினார். அங்கே ஒருபுறமாக தீவட்டிப் பந்தமும், அரணிக் கட்டைகளும் கிடந்தன. மன்னர், அரணிக் கட்டைகளை எடுத்து, ஒன்றுடன் ஒன்றைத் தேயத்தார். தட்டினார். நெருப்பை உண்டாக்கினார். தீவட்டியைக் கொளுத்தி எடுத்துக் கொண்டு, வளைந்து வளைந்து செல்லும் சுரங்கப் பாதையில் லாகவமாகச் சென்றார். சோழ விநோதனும் பலவிதமான சிந்தனைகளோடு மன்னரைத் தொடர்ந்து சென்றான்.

ஒன்று, ஒன்றரை நாழிகை நேரத்துக்குப் பிறகு, மன்னரும் சோழவிநோதனும் சுரங்கப் பாதையைக் கடந்து வெளியே வந்தார்கள். அந்த இடம், பார்க்கப் பயங்கரமாயிருந்தது. சுற்றிச் சூழ மலைகள்! கரடு முரடான கரிய பெரிய பாதைகள் நிறைந்த மலைகள்! பார்வை படும் இடங்களிலெல்லாம் அழுகிக் கிடக்கும் பிணங்கள்! எலும்புக் கூடுகள்! கபாலங்கள்! இரண்டு மூன்று கெஜ தூரத்தில் மலை போன்ற ஒரு சிலை. அந்தச் சிலைக்கு அடியில், தலைகள்! மண்டையோடுகள்! எலும்புக் குவியல்கள்!....

சோழ விநோதனுக்கு உயிர் நடுங்கியது! உடலெல்லாம் வேர்வை வெள்ளமாய்ப் பொங்கி வழிந்தது! அவன் பிரமித்து நின்ருன்!....

மறு கணம், "குழந்தாய், அந்தச் சிலையின் அருகில் போ!.." என்ருர் மன்னர். சோழ விநோதன், ஏதோ கேட்பதற்காகத் திரும்பிப் பார்த்தான். திடுக்கிட்டான்! ஊழித் தீவு மன்னனின் இடது கையில் தீவட்டி, வலது கையில், இரத்தக் கறை படிந்த வாள்! கொலை வாள்!....

"அஞ்சாதே! தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றி ஒன்பது மூத்த பிள்ளைகளின் உதிரத்தைக் குடித்த பூதம், இந்த மன்னன்தான். ஆனல் இந்தப் பயங்கரக் கொடுமையை இந்த அரக்கன் செய்வது ஏன்? என்ன காரணம்? அதைத் தெரிந்துகொள்ள நிதானமாக முயற்சி செய். இந்த ரத்தப் பிசாசின் கழுத்தருகிலேயே என் வாள் காத்திருக்கிறது. நீ எதற்கும் பயப்பட வேண்டாம்!..." என்று சோழ விநோதனுக்குத் தைரியம் ஊட்டியது, மர்மக் குரல்!

"குழந்தாய், என்ன யோசிக்கிருய்..? நேரமாகிறது. சிலையின் எதிரில் போய் நில்!.." என்று கொடுவாளை அப்படியும் இப்படியுமாக வீசியவாறே உறுமினன், உக்கிரவன்மன்.



"மன்னரே, என்னைப் பலியிடப் போகிறீரா..?"

"ஆமாம். உனக்கு முன், தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றி ஒன்பது மூத்த மகன்களைப் பலியிட்டிருக்கிறேன். எண்ணம் பலிக்கவில்லை. பலிக்கும் வரைப் பலியிட்டுக்கொண்டேயிருப்பேன்! முதல் பலி, என்னுடைய மகன், கடைசி பலி நீயாக இருந்தால் மிகவும் மகிழ்வேன்!...."

"அட, படுபாவி! பெற்று வளர்த்த பிள்ளையையா பலி கொடுத்து விட்டாய்! ஐயோ, இதனால், நீ அடையும் பயன்?"




"நான் அடையப்போகும் பயன் பிரும்மாண்டமானது! அதோ, அந்தச் சிலையின் வயிற்றைப் பார்!.." என்றான் அரசன்.

சோழ விநோதன் சிலையை அணுகி, அதன் வயிற்றைப் பார்த்தான்.

'தாய்க்குத் தலைப் பிள்ளை
தலை திருகித் தந்தால்
வாய்க்கும் பயன் கேள்!
வைரம் ஒரு கோடி!
மரகதம் ஒரு கோடி!
மாணிக்கம் ஒரு கோடியாம்!

அந்த இரும்புக் கற்சிலையின் பெருத்த தொந்தியில் செதுக்கி வைக்கப்பட்டிருந்த இந்தத் தலைவாங்கிக் கவிதையைப் படித்ததும், சோழ விநோதன் ஸ்தம்பித்து நின்றான்!

"சரி, நேரமாகிறது, தலையைக் குனி!..என்று கோரமாகச் சிரித்தவாறே கொடுவாளைத் தலைக்கு மேலே ஓங்கினான் மன்னன்.

அடுத்த விநாடியே, 'படீல்!..' என்று ஒரு சத்தம்! மன்னனின் கைவாள் எகிறிப் போய் தூர விழுந்தது! அவன் கைவாளை வெட்டித் தட்டி விட்ட மாய உருவம், மர்மக் குரலில் எகத்தாளமாய்ச் சிரித்தது!

மன்னன் திடுக்கிட்டான். நடுங்கித் தவித்தான். அங்கும் இங்கும் பார்த்து அலறினான். அந்தப் பயங்கரப் பிரதேசத்தில் தன்னைத் தவிர, சோழ விநோதனைத் தவிர வேறு யாருமில்லை. ஆமாம், வேறு யாருமே தென்படாததைக் கண்டு 'திருதிரு'வென விழித்தான்!

"மனிதத் தன்மையற்ற மிருகமே! என்னடா விழிக்கிறாய்..? பேராசை வெறியால் பெற்ற பிள்ளையையும்,

## சுதந்தரக் கொடி!




தலைப்பிள்ளைகளையும் அநியாயமாய்க் கொன்றொழித்த கொடியவனே! மனிதனுக வாழ்வதற்கே தகுதியற்ற நீயும் ஒரு மன்னனு? த்தூ!..'' ஆத்திரமாக ஏசிப் பேசிவிட்டு, அந்த அறிவில்லா மன்னனின் முகத்தில் காறித் துப்பியது மாயக்குரலுக்குச் சொந்தமான மர்ம உருவம்!

''ஐயோ, இதென்ன விந்தை! உருவத்தைக் காணவில்லை. குரல் மட்டும் கேட்கிறதே!..'' என்று ஒன்றும் விளங்காமல், கண்ணை உருட்டிக் கொண்டு திணறினுன் அரசன்.

''ஓ, அதுவா? அதுதான் செந்தமிழ் நாட்டுச் சித்தர்களின் செப்பிடு வித்தை! பிறர் கண்ணுக்குப் படாமல் அரூபமாக நடமாடும் இந்த விநோதச் செயல், மாயமல்ல, மந்திரமல்ல: முத்தமிழ்க் கொடி பறக்கும் முதிர்ப் பனி மலையில் கண்டெடுத்த பச்சிலை மூலிகைகளின் மகத்துவம்! ஹூம், ரத்த வெறிகொண்ட யாரோ ஒரு பித்தனின் எத்துக் கவிதையில் சித்தம் தடுமாறி, பெற்ற வயிறுகளைப் பற்றியெரியச் செய்த படுபாவி! ஆண் என்று நம்பி என்னையும் பலியிட முனைந்தாயே, நான் ஆணுமல்ல, என் பேர் சோழ விநோதனுமல்ல, என் தந்தைக்கு நான் மூத்த பிள்ளையுமல்ல; நான் பெண்! என் பேர் மதுராந்தகி! அதோ, உன் கழுத்தருகில் வாளை நீட்டிக்கொண்டிருக்கிறுனே, சோழ விநோதன் - அவன்தான் என் அருமை அண்ணன்! என் தந்தைக்கு அவன்தான் மூத்த மகன்!...'' என்று கூறியவாறே, தனது ஆண் வேடத்தைக் களைந்து எறிந்தாள், மதுராந்தகி!

உடனே, ''ஆ, நான் ஏமாந்தேன்? ஏமாந்தேன்! ஏமாந்தேன்!..'' என்று அலறித் துடித்துப் பதைத்தான் மன்னன், மதிகெட்ட மன்னன்!

''எங்களிடம் மட்டுமல்லடா, ஆயிரம் தலை வாங்கவிருக்கும் இந்த அபாயக் கவிதையின் ஆசை

வார்த்தையிலும் நீ ஏமாந்துதான் போனாய்! இத்தனை காலமும், தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது தலைகளைப் பலி கொடுத்தும் பெறமுடியாத மும்மணிப் புதையலை, இப்போது உன் கையாலேயே எடுத்துக் காண்பிக்கிறேன், பார்! ஏ, பொருளாசையால் அறிவிழந்து வெறி பிடித்த மன்னா! உம், அந்தச் சிலையின் மீது ஏறு!..'' என்று உத்தரவிட்டான், மாய உருவிலிருந்த சோழ விநோதன்.

எதிர்க்கவும் வகையில்லை; மறுக்கவும் வழியில்லை. மன்னன், அந்தப் பிரும்மாண்டமான சிலையின்மீது ஏறி, தோளில் அமர்ந்தான்.

''உம், அந்தச் சிலையின் தலையைப் பார்! பரமனுக்கும். உமையாளுக்கும் மூத்த மகனான அந்தப் பிள்ளையார்ச் சிலையின் தலைமீதுள்ள பித்தானைப் பலமாகத் திருகு!'' என்று கம்பீரமாய்க் கூவினான் சோழவிநோதன்.

உடனே, ''அண்ணா! உன் ஆராய்ச்சி மிகுந்த அறிவு நுட்பத்தை மெச்சுகிறேன்!'' என்று பெரு மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தாள் மதுராந்தகி.

சில விநாடிகளுக்குப் பின் - சித்தத் தடுமாற்றங்கொண்ட வேந்தன், அந்தப் பித்தானைத் திருகினான். சுழற்றிச் சுழற்றித் திருகிக் கீழே வைத்தான். மறு நொடி - குபீரென்று ஒளி வெள்ளம் பரந்தது! சிலையின் உடலுக்குள்ளிருந்த முக்கோடி மும்மணிக் குவியல்கள் ஜகஜ் ஜோதியாய்ப் பிரகாசித்தன!....

அடுத்த கணம் - ''ஆ! கோடி மாணிக்கங்கள்! கோடி மரகதங்கள்; கோடி வைரங்கள்! எல்லாம் கோடி கோடி; ஆஹ்ஹஹ்ஹா!..'' மன்னன் உயிர் மயங்கி ஓங்கிச் சிரித்தான்! உடல் குலுங்கச் சிரித்துக்கொண்டே இதயம் வெடித்து, வாயிலும் மூக்கிலும் ரத்தமாய்க் குபுகுபுக்க, சிலையின் மீதிருந்து விழுந்தான். அவனோடு ஆயிரம் உயிரைப் பலிகொண்ட அந்தச் சிலையின் காலடிகளில் விழுந்தான்!..

மூன்றாவது நாள் காலை. புயலால் பழுதடைந்து, ஊழித் தீவின் கரையோரமாக ஒதுக்கப்பட்ட ஏழு மரக்கலங்களும் சரி செய்யப்பட்டன. அதில் பிரயாணம் செய்துவந்த முத்து வணிகர்களுக்கும், செந்தமிழ் நாட்டு இளவரசன் சோழவிநோதன், அவனின் அருமைத் தங்கை மதுராந்தகி எல்லோருக்கும், கொடுமையிலிருந்து மீட்கப்பட்டு குடியுரிமை பெற்ற ஊழித் தீவு மக்கள் உல்லாச விருந்தூட்டி வாழ்த்தி வணங்கினார்கள். பிறகு, எல்லோரையும் மரக்கலங்களில் ஏற்றி வழியனுப்பினார்கள். மரக்கலங்கள் கடலில் மிதந்து சென்றன. ஊழித் தீவு மக்கள், மரக்கலங்களை நோக்கி வானளாவ வாழ்த்தொலி எழுப்பி ஆரவாரித்தார்கள்: ஊழித் தீவில் அமைதி சேர்த்த சோழ நாட்டு மக்கள் நீடுழிவாழ்க; வாழ்க!

---

## கண்ணன் கழகம்

### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....................

விலாசம் ....................

....................

பிறந்த தேதி ...............

(தேதி, மாதம், வருஷம்

செப்.-15, 1958

# நீங்களும் நானும்

ஆர்வி

**கே. வி. சந்தர், காந்திநகர்**

கே: ஜனு என்ற பெயரில் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் குழந்தைகளுக்காக எழுதும்போது மட்டும் எழுதுகிறார் என்று ஒரு பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. இது சரியா?

ப: அது சரியல்ல; தவறு. முற்றிலும் தவறான செய்தி. (முன்பு அதே பத்திரிகையில் சரியான விவரம் வெளிவந்திருக்கிறது. இப்பொழுது அதை மறந்து, தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள்.)

**பொ. வீரையன், சின்னாளப்பட்டி**

கே: இந்தி ஆட்சிமொழியாவது பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: நாட்டுக்குப் பொதுவான மொழி ஒன்று அவசியம் தேவைதான். தெரிந்துகொள்ள வேண்டியதுதான். ஆனால் ஆட்சி மொழியாவதைப்பற்றி அடுத்த தலைமுறையில் பார்த்துக்கொள்ளலாம். இதில் அவ்சரம் காட்டுவது சரியல்ல.

**கே. ஏ. முகமதலி, சிதம்பரம்**

கே: காஷ்மீர் பிரச்னை என்றால் என்ன?

ப: வல்லடி வழக்கு என்று கேள்விப்பட்டிருக்கிறாயா? அதுதான்! ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாகக் குழப்புகிற பிரச்னைக்குக் காஷ்மீர் பிரச்னை என்று பொருள். வெளிநாட்டாருக்கு அது ஒரு விக்கிரமாதித்தன் சிம்மாசனம். அதில் ஏறினால் ஒரு பேச்சு; அதைவிட்டு இறங்கிவிட்டால் வேறு பேச்சுத்தான். மேல் நாட்டாரின் திரிசமங்களுக்கு அது ஓர் உரைகல்.

**எம். கே. ராமகிருஷ்ணன், கோடம்பாக்கம்**

கே: உலகத்திலேயே மிகப் பெரிய அணைக்கட்டு எது!

ப: இப்பொழுது கீழ் பஞ்சாப்பில் கட்டப்பட்டுவரும் பக்ரா - நங்கல் அணைக்கட்டுதான். அதன் உயரம் 740 அடி.

**சுப. அரங்கராசன், பவித்திரம்**

கே: ஒரு மாணவன் எந்த நோக்கத்தோடு கல்வி பயிலவேண்டும்?

ப: தெளிந்த அறிவு பெறுவதே அவனுடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

**ஜே. பழனி, காட்பாடி**

கே: தற்போது ஐக்கிய நாடுகள் சபையில் எத்தனை நாடுகள் அங்கம் வகிக்கின்றன?

ப: 89 நாடுகள்.

**ஆ. ஆராய்ச்சி, கள்ளக்குறிச்சி**

கே: காலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது நல்லதா, மாலையில் குளிப்பது நல்லதா?

ப: காலையில் அதாவது எட்டு மணிக்குமேல் பத்து மணிக்குள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது தான் நல்லது என்பது அநுபவமுள்ள பெரியவர்களின் கருத்து.

**ஜி. தருமராஜி, கோலார்**

கே: அறுபத்து நான்கு கலைகள் எவை?

ப: அந்தக் கணக்கு மிகவும் பழமையானது. இப்பொழுது புதிதாகத்தான் பட்டியல் எடுக்க வேண்டும். பல கலைகள் நசித்து அழிந்து தேவையற்றவையாகி விட்டன. புதுப் புதுக் கலைகள் காலத்தின் தேவைக்கேற்பத் தோன்றியுள்ளன.

**ஆர். சீனிவாசன், அக்கியம்பட்டி.**

கே: பண்டைக் காலத்துப் பஞ்சாயத்துக்கும் இப்பொழுதுள்ள பஞ்சாயத்துக்கும் என்ன வித்தியாசம்?

ப: அந்தக் காலத்துப் பஞ்சாயத்து முடிவானது; இந்தக் காலத்துப் பஞ்சாயத்து கடையானது.

# காலம் சொல்லும் கதை

## கோவி. மணி சேகரன்

பிரதக் கண்டத்தின் முதல் நாடகாசிரியர்களில் ஒருவர் பாண்டியன் மதிவாணன். இவர் கடைச்சங்கத்துப் பாண்டிய மன்னர். இவர் கவியரங்கம் ஏறிய செந்தமிழ்ப்புலவர்; சிறப்பு மிக்க நாடகாசிரியர். இவரால் இயற்றப்பட்ட நாடக நூலுக்கு மதிவாணர் நாடகத்தமிழ் நூல் என்று பெயர்.

ஐந்து இசை நாடக நூல்களுள் மதிவாணர் நாடகத்தமிழ் நூலும் ஒன்ருகும். கருவூலங்கள் போன்ற எத்தனையோ தமிழ் நூல்கள் கால வெள்ளத்தால் அழிந்து போயின.

பாண்டிய மன்னர் மதிவாணருடைய நாடக நூலின் சில சூத்திரங்களை, தமிழ்ப் பெருங்காவியமான சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் என்பவர் கையாண்டிராவிடில், 'நாடகக்கலை யற்றவர் தமிழர்' என்று கூற இடம் ஏற்பட்டிருக்கும்.

தொல்காப்பியத்தில், நாடகத்தைப்பற்றிய இலக்கணம் கூறப்படுகிறது. எனவே நாடகம், தமிழ் மொழியின் வீடகத்திற்குப் பழமையான ஏடகமாய் விளங்கி யிருக்கிறது!

* * *

ஒழுக்கத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்குவது தென்ருடு.

அப்படிச் சிறந்து விளங்கிய பொற்கைப் பாண்டியன் என்னும் மன்னர் தாமே பேசுவதைக் கேளுங்கள்:—

* * *

குடிகளின் நன்மையைக் கருதி செங்கோல் செலுத்துவதே உண்மையான அரசியலாகும். என்னுடைய முன்னோர்கள் அவ்வண்ணமே அரசு புரிந்தனர். நான்மட்டும் எப்படி அதிலிருந்து வழுவ முடியும்?

மதுரையாகிய என்னுடைய தலைநகரத்தில், அந்தணர்களுக்கெனத் தனி வீதிகள் உண்டு. ஏனென்ருல், அவர்கள் அறவோர்; செந்தண்மை பூண்டு ஒழுகுபவர்கள்.

அந்த வீதியில் கீரந்தை எனும் அந்தணர் ஒருவர் தலயாத்திரைக்குப் புறப்பட ஆயத்தமானுர். பொழுது விடிந்தால் அவருடைய புறப்பாடு.

அன்றிரவு நான் வழக்கம் போல் நகர சோதனைக்குப் புறப்பட்டேன். அந்தணர் வீதியைக் கடந்துகொண் டிருக்கும்போது, மறைவிலிருந்து எட்டிப் பார்த்தேன். கீரந்தை எனும் அந்தணரும் அவருடைய மனையாளும் யாத்திரை விஷயமாகப் பேசிக்கொண் டிருந்தனர்.

அந்த அந்தணருடைய மனைவி, தன்னுடைய கணவரை நோக்கி, ''தாங்கள் தலயாத்





திரைக்குப் புறப்பட்டு விட்டால், தனிமையில் இருக்கும் எனக்கு யாரோ துணை?'' என்று கேட்டாள். அதற்கு அந்த அந்தணர் என்ன மறுமொழி கூறினர் தெரியுமா? ஆகா! நினைக்கும்போதெல்லாம் நெஞ்சு இனிக்கிறது! இதயத்திலே நம்பிக்கை மேன்மேலும் பொங்கி வழிகிறது!

அந்த அந்தணர் சொன்னது இதுதான்:- ''மன்னனது செங்கோல் நின்னைக் காக்கும்!''

நான் அந்த அந்தணருடைய மனையாளைக் காக்கும் பொறுப்புடன் அரண்மனை நோக்கி நடந்தேன்.

அந்தணரும் தலயாத்திரைக்குப் புறப்பட்டு விட்டார்.

மறுநாள் காலை முதல் அப்பெண்ணரசிக்குப் படி அரிசி முதல் எல்லா நலங்களையும் வழங்கி வர உத்தரவிட்டேன். இந்த உத்தரவால் ஏனைய அந்தணப் பெண்மணிகள் என்மீது ஐயப்படக் கூடாதல்லவா? எனவே, அவ்வீதியிலுள்ள எல்லாருக்கும் சேர்ந்தே வழங்க ஆணையிட்டேன்.

நல்லார் ஒருவர் இருந்தால் போதும்; அவர் மூலம் பல்லோர் வாழமுடியும் என்ற உயர்ந்த எண்ணம் அப்போதுதான் எனக்கு உதயமானது.

பல நாட்கள் சென்று கீரந்தை தலயாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பி வந்தார். அது எனக்குத் தெரியாது.

தினம் தினம் நான் அப்பெண்மணியின் இல்லத்தைக் காவல் காத்து வந்தேன். வழக்கம்போல் அன்றும் சென்றிருந்தேன். ஆனல் உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. அதுவும் ஆண் குரல்!

எவனே கள்வன்தான் புகுந்துவிட்டான் என்ற சினத்தின் காரணமாகக் கதவைத் தட்டிவிட்டேன்.

அந்தணரும் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தார். நான் மறைவில் மறைந்துகொண்டேன். அந்தணரைக் கண்ட பிறகுதான் என் தவற்றை நான் உணரலானேன். தலயாத்திரைக்குச் சென்று திரும்பிய அந்தணர் அதன் பெருமைகளைக்

கூறிக்கொண்டிருந்த சமயத்தில் ஐயப்பட்டுக் கதவைத் தட்டிய கரத்தை நொந்துகொண்டேன்.

உள்ளே சென்ற அந்தணர் மனையாளை ஐயத்துடன் நோக்கினர். தாம் இல்லாதபோது தம்முடைய மனையாள் ஏதோ தவருக நடந்திருக்கிருள் என்று எண்ணலானர்.

அப்புனிதவதியோ பலவாறு எடுத்துக் கூறினுள். அந்தணருடைய ஐயம் அகன்றதாகக் காணும். கடைசியாக அப்பெண்ணரசி என்ன சொன்னுள் தெரியுமா?

''முன்னொருநாள் அரசனுடைய செங்கோல் என்னைக் காக்கும் என்று கூறி யாத்திரைக்குச் சென்றீர்கள்; இன்றும் அதே செங்கோல் என்னுடைய கற்பையும் காக்கும்'' என்று கூறி அழுதாள்.

என்னுடைய கண்ணில்தான் நீர் வழிந்ததே யொழிய, இதயத்தில் குருதியல்லவோ கொட்டியது! என்னல் அப்புனிதவதியின் கற்புக்கு இழுக்கா?

இவ்வாறு சிந்தித்த நான் ஒரு முடிவுக்கு வரலானேன். உடனே, அந்த அந்தணர் தெருவிலுள்ள எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிக்கொண்டே அரண்மனைக்கு விரைந்தேன்.

மறுநாள் விடிந்தது.

அந்தணர்கள் ஒன்று கூடினர். தங்கள் வீட்டுக் கதவுகளை யாரோ கள்வன் தட்டியிருக்கிருன் என்று முடிவு கட்டினர். இந்த முடிவின் காரணமாக, கீரந்தை என்னும் அந்தணர்க்கும் ஒருவாறு தம்முடைய மனையாள்மீது ஏற்பட்ட ஐயம் நீங்கலாயிற்று.

எல்லாரும் கூடி என்னை அடைந்தனர். முறை வழங்க வேண்டினர். ''கள்வனறியாப் பாண்டிய நாட்டில் கள்வன் புகுந்துள்ளான்'' என முறையிட்டனர்.

நான் ஒன்றுமறியாதவன் போல் நடித்தேன். பிறகு அவர்களை நோக்கி, ''அவனைப் பிடித்துக் கொடுத்தால், என்ன தண்டனை வழங்க நீங்கள் நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''கதவைத் தட்டிய அவனுடைய கரங்களை வெட்டி எறியவேண்டும்'' என்று அவர்கள் கூறினுர்கள்.

உடனே சிறிதும் தயங்காமல், நான் என்னுடைய உடைவாளை உருவி, வலக்கரத்தைத் துண்டித்தேன்!

எல்லாரும் பதறினர்; விளக்கினேன். வருந்தியவாறே புகழ்ந்தனர்; அதுவேபோதும் என்னுடைய ஆட்சியின் ஒழுக்கத்திற்கு!

* * *

கரம் இழந்த பாண்டியர் என்ன செய்துகொண்டார் தெரியுமா? பொன்னல் கரம் செய்து பூட்டிக் கொண்டார். அதனுல்தான் அவரைப் பொற்கைப் பாண்டியன் என்று புலவர்கள் பாராட்டத் துவங்கினர்.

இந்த இனிய வரலாற்றை மதுரையை எரிக்கவேண்டிப் புறப்பட்ட கோவலன் மனைவி கண்ணகிக்கு, மதுராபதித் தெய்வம் கூறியது. இதை நீங்கள் செந்தமிழ்த் தேனருவி பாய்ந்தோடும் சிலப்பதிகாரத்தில் காணலாம்.


# கண்ணன்

## சந்தா விவரம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா (தீபாவளி மலர் உள்பட) | ரூ. 4 00 |

வெளி நாடு

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | 5 00 |

தனிப் பிரதி 13 நயா பைசா

கலைமகள், மஞ்சரி, கண்ணன் மூன்றும் சேர்ந்த

| | |
|---|---|
| குடும்பச் சந்தா | ரூ. 14/25 |
| வெளி நாடு | ரூ. 18/00 |

## 16. பிடிபட்டான் பையன்!

ஸம்பத்தும் ஸ்ரீதரனும் அன்று 'ஹார்பரில்' கறுப்புக் கண்ணாடி' மனிதனைப் பார்த்தார்களே அன்று வெள்ளிக்கிழமை. வருகிற திங்கட்கிழமைதான் கப்பல் மலேயாவுக்குப் புறப்படுகிறது. சனிக்கிழமை யன்று காலையில் பட்டாபியும் ஸம்பத்தும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஸம்பத், தான் அன்று கொண்டு வந்திருந்த டயரியையும் காகிதக் கட்டுகளையும் கொண்டுவந்து காண்பித்தான். அந்தக் கடிதங்களிலிருந்து அவர்கள் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டார்கள். அவைகள் எல்லாம் மலேயாவிலிருந்து ஒரு நபரால் எழுதப்பட்டவை என்று தெரிந்தது.

''அப்பா! அன்று ஏன் அப்படி மயக்கம் போட்டு விழுந்தீர்கள்? சொல்லமாட்டீர்களா இன்னும்? அந்தக் கடிதத்தில் அப்படி ஒன்றும் விஷயம் இல்லையே!..அது சாதாரணக் கடிதந்தானே!..'' என்று கேட்டான் ஸம்பத்.

''சாதாரணக் கடிதமில்லை, ஸம்பத்! அதில் ஒரு முக்கிய ரகசியம் இருக்கிறது. அதை நான் உனக்கு இப்பொழுது தெரியப்படுத்தப்போவதில்லை. அந்த முட்டாள் வேர்க்கடலைக்காரன் பேப்பர் அகப்படாமல் அன்று அதில் சுருட்டிக்கொண்டு வந்திருக்கிறான்.... அது என் கைக்குக் கிடைக்காவிட்டால்....அப்பா! எவ்வளவு பெரிய ரகசியம் எனக்குத் தெரியாமல் போயிருக்கும்!''

''சரி, அப்பா! இந்த டயரியைப் பாருங்களேன். நான் நினைத்தது சரியாகிவிட்டது. சின்னசாமிக் கொத்தனார் என்று அடிக்கடி கணக்கு எழுதியிருக்கிறான். அந்த மாய ஜன்னல் செய்யத்தான் கூலி போலிருக்கிறது.''

''நல்ல 'மாய ஜன்னல்' போ! அதிசயமாக இருக்கிறது அது. 'மலேயா வேலை' போலிருக்கிறது!''

''அப்புறம் பாருங்கள். மருந்துக் கடையில் மருந்துகள் அடிக்கடி வாங்கியிருக்கிறான். அது யாருக்கோ தெரியவில்லை?..''

''அது கிடக்கட்டும். இந்த ஆள் எழுதியிருக்கிற கடிதத்தைப் பார்! பெயர் 'கேவல்ராம்' என்று போட்டிருக்கிறது. காரசாரமாக இவர்களைத் திட்டி எழுதியிருக்கிறானே!''

'டயரி'யைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். செலவுக் கணக்குகள் வெகு ஒழுங்காக எழுதியிருந்தான். ஏதோ ஒரு கடிதம் - அவன் யாருக்கோ எழுதியது - போஸ்ட் செய்யாமலேஇருந்தது அது - கையெழுத்தை அதில் காணவில்லை. கடிதத்தின் கடைசியில் ஒரு 'கறுப்புக் கண்ணாடி'யின் சின்னம் இருந்தது.

''அப்பா! 'கறுப்புக் கண்ணாடி' இவர்கள்டிரேட் மார்க் போலிருக்கிறது.''




பரிசுபெற்ற தொடர்கதை!

பட்டாபி சிரித்தார்.

''விநாயகத்தின் மேல் ஒரு சந்தேகம் எனக்கு. விநாயகத்திற்கும் இவர்களுக்கும் தொடர்பு இருக்குமென்று சந்தேகிக்கிறேன். இதோ பார், இந்தக் கைக்குட்டையை!..''

''ஏது அப்பா இது?''

''அதுதான் சொல்கிறேனே! யாரோ விநாயகத்தின் வீட்டிற்கு வந்தவன் நழுவவிட்டுப் போய் விட்டான்..''

''இங்கே கொடுங்கள்....இது யாருடையது தெரியுமா? அந்தக் 'கறுப்புக் கண்ணுடி'யினுடையது தான்!''

''நினைத்தேன். அவன் அந்த வீட்டிற்கு வரும்போது நானே பார்த்தேன்.''

''இந்த 'டயரி'யில் வண்ணுன் கணக்கு எழுதியிருக்கிறன். வண்ணுன் குறியும் இருக்கிறது. இந்தக் கைக்குட்டையிலும் அதே குறி இருக்கிறது, பாருங்கள்.''

''எனக்கு முன்பே ஒரு சந்தேகம். விநாயகம் அவர்களுக்குக் கையாளாக இருப்பான் என்றுதான் நினைத்தேன்.''

''அப்படியானல் மிதிலா விலாஸில் திருடியது 'கறுப்புக் கண்ணுடி'தான் என்று அவன் ஏன் காட்டிக் கொடுக்கவேண்டும்?'' என்று கேட்டான் ஸம்பத்.

''என்னமோ தெரியாது!-இரும்புப் பெட்டி அவனிடந்தான் இருக்கிறது. முதலில் அவனே 'அரெஸ்ட்' செய்தால் என்ன?''

வாசலில் சைக்கிள் மணி அடித்தது. வந்தது சாமிக்கண்ணுதான்.

''வாருங்கள்! சாமிக்கண்ணு!'' என்று கூறிய பட்டாபி ஆச்சரியத்தில் ஆழ்ந்து போனுர். ஏனெனில் ஹெட்கான்ஸ்டபிள் சாமிக்கண்ணுவின் கையில் அந்த இரும்புக் கைப்பெட்டி இருந்தது. ஸம்பத் ஆச்சரியத்தில் மூழ்கினுன். அந்த இரும்புப் பெட்டி அவருக்கு எப்படிக் கிடைத்தது?

* * *

விநாயகத்திடமிருந்து இரும்புப் பெட்டியை துரை பறித்துக் கொண்டு போனதும் விநாயகத்திற்குப் பெருத்த ஏமாற்றமாகிவிட்டது. இவ்வளவு சிரமப்பட்டும் கடைசியில் வீணுகிவிட்டதே என்று ஏங்கினுன். உடனே அவனுல் துரையைத் தொடர முடியவில்லை. அது வீணுகத்தான் போகும் என்று அவனுக்குத் தெரியும். 'இருக்கட்டும், ஒரு கை பார்க்கிறேன்' என்று தன் மனைவியிடம் சவால் விட்டான்.

அதைத் தொடர்ந்து ஒரு வாரத்திற்கு அவனுக்கு ஸ்டேஷனிலேயே 'டியூடி' இருந்ததால் அவனுல் அசைய முடியவில்லை. ஞாயிற்றுக்கிழமைதான் அவனுக்கு 'ரெஸ்ட்' கிடைக்கும். ஆதலால் ஞாயிற்றுக்கிழமை இரவு மறுபடியும் போய் அதட்டி அதை வாங்கிக் கொண்டு வந்துவிடுவது என்ற தீர்மானத்திற்கு வந்தான். ஞாயிற்றுக்கிழமை இரவு தன் திட்டங்களையெல்லாம் வகுத்துக்கொண்டான். அவன் மனைவிக்குத் துரை வந்து போனதிலிருந்து பயம் அதிகரித்துவிட்டது. தன் கணவனிடம், ''இனிமேல் இந்தமாதிரி விவகாரத்திற்குப் போகாதீர்கள்'' என்று எச்சரித்தாள். அவளுக்கு இரும்புப் பெட்டியின் மேல் இருந்த ஆசை அறவே போய்விட்டது.

* * *

சுப்புவும், அந்த 'வேர்க்கடலை'யும் தங்கள் திட்டங்களை வகுத்துக் கொண்டார்கள். சுப்பு அன்று அந்த இரும்புப் பெட்டியைப் புதைத்து வைத்தானல்லவா! மறுநாள் மாலை அந்த வேர்க்கடலைக் காரப் பையனுக்கு அந்த இரும்புப் பெட்டியைக் காட்டி, தன் சாமர்த்தியத்தைக் காட்டிக்கொள்ள அதே இடத்தில் தோண்டினுன். அவனுக்குப் பெரிய ஏமாற்றம் காத்திருந்தது. வெட்ட வெட்ட மண்தான் கிடைத்தது. அந்தப் பெட்டியைத் தான் அவன் அப்பா 'பஞ்சு ஸார்' எடுத்துக்கொண்டு விட்டாரே! அன்று காலையிலிருந்தே அவருக்கு ஒரு சந்தேகம் இருந்தது சுப்புவின் மேல். சுப்புவும் அடிக்கடி கொல்லையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கவே அவருடைய சந்தேகம் வலுத்தது. உடனே பெட்டியைக் கண்டுபிடித்து விட்

## இயற்கைச் சாவு?

அன்று மதுரையில் டாக்டர்கள் மகாநாடு ஒன்று வெகு ஆடம்பரமாகக் கூடியது. திருச்சியிலுள்ள அத்தனை டாக்டர்களும் அம்மகாநாட்டிற்குச் சென்றிருந்தார்கள்; திருச்சி டாக்டர் ஒருவர் தம்முடைய ஊர் டாக்டரான மற்றொருவரைப் பார்த்து, "ஆமாம், நம் ஊரிலுள்ள அத்தனை டாக்டர்களும் இங்கே வந்துவிட்டோமே, இன்று அங்கே யாராவது நோய் வாய்ப்பட்டு இறந்தால் என்ன செய்வது?" என்று கேட்டார்.

அதற்கு மற்றொரு டாக்டர், "அங்கே இன்று இறப்பவர்கள் தான் உண்மையிலேயே பாக்கியசாலிகள்! அவர்களுக்குத்தான் இயற்கைச் சாவு" என்றார்! கருத்தைப் புரிந்துகொண்ட மற்ற டாக்டர்கள் பதில் ஏதும் கூறமுடியாமல் வாய்விட்டுச் சிரிக்கவும் முடியாமல் திணறிப் போனார்கள்.

அவர் பேச்சின் உட்கருத்து நமக்குத் தெரிந்த விஷயந்தானே! இந்தக் காலத்தில் இறப்பவர்களில் பெரும்பாலோர்க்கு இயற்கைச் சாவு ஏது? சிகிச்சைக்காகச் சென்று டாக்டர்கள் பரிசோதனைக்குப் பலியாகுபவர்கள்தானே அதிகம்! இல்லையா?

பி. மதிவேலன்

டார். உடனேயே அதை சாமிக்கண்ணுவிடமும் கொடுத்தனுப்பி விட்டார்.

சுப்பு ஏமாற்றத்துடன், "என்னடா, வைச்சதைக் காணோமே!" என்றான்.

"அட போடா! உனக்குச் சொப்பனம்! அந்த மாதிரி..நீ.. யாவது..இரும்புப் பெட்டியை யாவது.... புதைக்கவாவது?" என்றான் வேர்க்கடலைப் பையன்.

பிறகு வேர்க்கடலைக்காரன் சுப்புவிடம் தன் திட்டத்தை விவரித்தான். திங்கட்கிழமை அவர்கள் ஊருக்குப் போவதை அவன் எப்படியோ தெரிந்துகொண்டிருந்தான்.

"திங்கள்கிழமை பட்சி பறந்துவிடும்....ஞாயிறு ராத்திரி 'ரெடியா' இரு.."

"ஓ..எஸ்! நான் ரெடி!" என்றான் சுப்பு.

"இதோ பாரு! ராத்திரி பதினொரு மணிக்கு வந்துவிடுவேன் நான். வாசல் வழியா வேலைக்காரனை எத்திப்பிட்டு நான் உள்ளே போவேன். நீ கொல்லைப்பக்கமா வந்து ஓர் ஏணி வச்சு ஜன்னலுக்கு நேரே சாத்தி ஏறி நின்னுக்கோ! அந்த ஜன்னல் வழியா நான் அந்த நெக்லெஸைத் தருவேன். வாங்கி வைச்சுண்டு ஜாக்கிரதையா வீட்டிலே வைக்கணும்."

"கறுப்புக் கண்ணாடி வேணுமேடா?"

"முட்டாளே! அது அவன் கிட்டே இருக்கு. வாங்கித் தர்றேண்டா, அதுக்கு என்ன அவசரம்?"

"சரி..சொல்லு.."

"பாக்கிப் பணத்தை மூட்டையாக் கட்டி நான் கொண்டு வர்றேன்..ஆளுக்குப் பாதி.."

"ரொம்ப சரி!..போயிட்டு வா! நாளை மறுநாள் ராத்திரி தானேடா?"

"ஆமாம்.. ஆமா....நாளன்னிக்கு....ஞாயிற்றுக்கிழமை.... இன்று வெள்ளி.."

இருவரும் பிரிந்தார்கள். சுப்புவின் துரதிருஷ்டத்தினால் அவனுடைய அந்தச் சம்பாஷணையை, அவன் அப்பா, பஞ்சு ஸார் ஒட்டுக் கேட்கவில்லை!

* * *

அன்று இரவு ஏழரை மணி சுமாருக்கு எதிராஜும் துரையும் கடற்கரையின் மணற்பரப்பில் தனியாக ஒரு கட்டுமரத்தின் அருகில் அமர்ந்து மெல்லிய குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"என்ன, எதிராஜ், ஞாயிற்றுக்கிழமை இரவே நான் போய் எல்லாப் பெட்டிகளையும் கொண்டு வந்துவிடுகிறேன். இங்கேயே

கொண்டு வந்து போட்டு விடலாம். முக்கியமாக இரும்புப் பீரோக்கள் மூன்றும் ஜாக்கிரதை. திங்கட்கிழமை இரவு சரியாகப் பத்தரை மணிக்கு கப்பல் புறப்படுகிறதாம். நமக்குத்தான் 'பாஸ்போர்ட்' இருக்கிறது. இங்கிருந்து எல்லாச் சாமான்களையும் எடுத்துக்




கொண்டு போவது சிரமம் இல்லை. நம் டாக்ஸியில் அந்தச் சின்ன டாக்ஸியைக் கொண்டு வந்து விடலாம். இங்கே ஏதேனும் சோதனை செய்வார்கள். அதற்கெல்லாம் தப்பிவிடலாம் சுலபமாக. எல்லாப் பெட்டிகளிலும் 'பாத்திரங்கள்' என்று எழுதி ஒட்டிவிடு. மற்றச் சில்லறைச் சாமான்களெல்லாம் கூடத்தான் கப்பல் ஏறுகிறதே! நாளன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை; கடைகள் கிடையாது. பதினொன்றரை மணிக்குக் கிளம்பினால் பன்னிரண்டரைக்குச் சரக்கோடு வந்துவிடலாம் இங்கே..'லாரி' ரெடியாக இருக்குமல்லவா?''

எதிராஜ் மௌனத்திலிருந்து விடுபட்டு, ''எல்லாம் 'ரெடி' தான்..'' என்றான்.

பிறகு இருவரும் 'ஹார்ப'ருக்குள் எப்படி

எப்படிப் பொருள்களைக் கொண்டு போவது என்று திட்டம் போட்டார்கள். பரிசோதனை செய்பவர்களின் கண்களுக்கெல்லாம் எப்படி எப்படித் தப்பவேண்டும் என்று திட்டம் வகுத்தார்கள்.

''எதிராஜ், இதெல்லாம் யாருக்கும் தெரியவேண்டாம். என்னையும் உன்னையும் தவிர யாருக்கும் தெரியக்கூடாது. 'வேர்க்கடலை'க்குக்கூடச் சொல்ல வேண்டாம். அன்றே அவனுக்கு ரொம்ப அதிருப்தி, நான் நாலணுக் கொடுத்ததில்'' என்றுன் துரை.

அதே சமயம், ''நச்..நச்..ஹச்...ஹ..ச்..'' என்று வெகு அருகில் தும்மல் சத்தம் கேட்டது. துரை ஒரே பாய்ச்சலில் கட்டுமரத்தின் பின்னுல் பாய்ந்து சென்றுன். இருளில் யாரோ ஒரு பையன்! ஐயோ! யாரது?..அதை அவன் கவனிக்கவில்லை. அவன் இரும்புப் பிடியில் அந்தப் பையன் சிக்கினுன். இருவரும் 'மொத்து மொத்' தென்று அடித்தார்கள். இருவரும் அந்தப் பையனைக் கரகரவென்று இழுத்துக்கொண்டு போய், 'கோடவு'னில் ஓர் அறையில் போட்டுப் பூட்டி வைத்தார்கள். அப்புறம் தான் துரை அவனை நல்ல வெளிச்சத்தில் பார்த்தான். அவனைப் பார்த்ததும், ''அட துரோகி! நீயா?..கிட இங்கேயே!..நல்ல வேளை மாட்டிக்கொண்டாயே! இல்லாவிட்டால் நாளைக்கு ஏதாவது தொந்தரவு செய்திருப்பாய் நீ.'' என்று சொல்லிப் பேய்ச் சிரிப்புச் சிரித்தான் துரை!

(தொடரும்)

## கையெழுத்தும் தலையெழுத்தும்

சென்னையில் ஒரு பிரபல பத்திரிகாசிரியர் இருந்தார். அவருடைய கையெழுத்து மற்றவர்களுக்குப் புரியவே புரியாது. அதிகம் என்ன? அவராலேயே மறு நாள் படிக்க முடியாது. பல ஆண்டுகளாக உள்ள அச்சுக்கோப்பாளன் ஒருவன்தான் அநுபவத்தினுல் அதை அச்சுக்கோத்து வந்தான்.

ஒரு நாள் அந்த அநுபவமுள்ளவன் வராமல், புதிதாக ஒருவன் அச்சுக் கோக்க வேண்டியிருந்தது. எழுத்தே புரியாமல் வெகு நேரம் தடுமாறிய அவன் தனக்குத் தோன்றியவாறெல்லாம் அச்சுக்கோத்து எப்படியோ ஒருவிதமாக ஒப்பேற்றினுன். ஆசிரியருக்கு அதை திருத்துவதற்குக்கூட நேரமில்லை. 'புரூப்' திருத்துபவர்களே அதைப் படித்து அச்சுக்கு அனுப்பிவிட்டார்கள்.

மறுநாள் அதை எடுத்துப் படித்துப் பார்த்தார் ஆசிரியர். ஒரே அபத்தமாக இருந்தது. ''கூப்பிடு அந்த ஆளை!'' என்று கோபத்தோடு கத்தினுர். அவன் வந்ததும், ''இன்று முதல் உன்னை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறேன்!'' என்று அவனிடம் ஒரு கடிதத்தை நீட்டினுர்.

கடிதத்தில் அவனுடைய திறமையைப்பற்றிக் குறிப்பிட்டுத் திட்டியிருந்தார்.

அச்சுக் கோப்பாளனுக்கு அந்த ஆசிரியரை விட்டால் போதும் என்று இருந்தது. வேறு ஒரு காரியாலயத்தில் வேலைக்குப் போனுன்.

''ஏதாவது சிபாரிசு இருக்கிறதா? உன்னைத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறுர்களா?'' என்று கேட்டார் அந்தக் காரியாலயத்தின் அதிகாரி.

''இதோ!'' என்று ஆசிரியர் திட்டி எழுதியிருந்த கடிதத்தை நீட்டினுன் அச்சுக் கோப்பாளன்.

பார்த்தார் அந்த அதிகாரி, ஓர் அட்சரமாவது புரிந்தால்தானே?

''அடேடே, அவரே சிபாரிசு தந்திருக்கிறுரா? அப்படியானுல் நாளை முதலே வேலைக்கு வந்துவிடு!'' என்று உத்தரவு போட்டு விட்டார். எப்படி அவன் தலையெழுத்து?

# குழந்தையின் வக்கீல்

## ஜோவலன் வாஸ்

கறுப்பாயிருந்த பாதரட்சைகள் பழுப்பு நிறமாக வெளிறிப் போயிருந்தன. அதற்குள்ளிருந்து வெளிப்பட்டு முழங்கால்கள் வரைக்கும் நீண்டிருந்தன காலுறைகள். இடுப்பு வரைக்கும் அந்தக் காலத்துக் கால்சட்டை; பின்பு சட்டைக்கு மேல் ஓவர்கோட். இவ்விதமான அலங்காரங்களுடன் அதோ தூக்கு மேடையை நோக்கிப் போகிறானே! அவன்தான் சிட்னி கார்ட்டன்.

அவன் முகத்திலே பயத்தின் பீதி இல்லை. தியாகத்தின் ஒளி திகழ்ந்து கொண்டிருந்தது. அவன் மரணமடையப் போவது அவனுக்காக அல்ல; அவனால் நேசிக்கப்பட்ட பெண்ணின் கணவனுக்காக! அவன் தனக்குள் நினைப்பதாக ஆசிரியர் கூறுகிறார்: 'நான் இதுகாறும் செய்த செயல்சளிலே மிக மிகச் சிறந்ததொன்றை இன்று செய்கிறேன்; நான் இதுகாறும் அநுபவித்திராத ஆழ்ந்த ஓய்வில் இன்று மூழ்கப் போகிறேன்!'

பிரஞ்சுப் புரட்சியின் அடிப்படையிலே புனையப் பெற்ற காவியம் 'இரு நகரங்களின் கதை.' லண்டன் மாநகரையும், பாரீஸ் நகரத்தையும் நாவலாசிரியர் எப்படிப் பிணைத்தாரோ, அப்படியே சார்ல்ஸ்டார்னே என்பவனையும் சிட்னி கார்ட்டனையும் பிணைத்து, அவர்களின் உருவத் தோற்றத்தைத் தமது கதையின் முடிவுக்கு உபயோகித்துக் கொள்கிறார். அந்த நூலின் ஆசிரியர்தான் சார்ல்ஸ் டிக்கென்ஸ்—ஒரு காலத்தில் உலக இலக்கிய ரசிகர்களைத் திணற அடித்தவர்.

போட்ஸ்மவுத்திற்கு அருகே லாண்ட்போர்டு என்ற சிற்றூரில் ஒரு சாதாரண வீடு. அதிலே திடீரென்று குழந்தை ஒன்று அழும் ஓசை. கையிலே மதுப் புட்டியுடன் உல்லாசமாக இருக்கும் தந்தை தலையில் அடித்துக் கொண்டார்.

அந்த நாள்—7-2-1812

குழந்தை டிக்கென்ஸ் வளர்ந்தான் வயிறு காய்ந்தது. காரணம்? தந்தை மிதமிஞ்சிச் செலவு செய்ததும், குடும்பப் பொறுப்பைக் கவனியாமல் ஊர் சுற்றியாக இருந்ததும்தான்! பிற்காலத்தில் டிக்கென்ஸ் 'ஊதாரித் தந்தை' என்று வருணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும் இதனாலேயே!

குடும்பம் கடன் தொல்லையால் பாதிக்கப்பட்ட பொழுது, டிக்கென்ஸின் தந்தை ஒரு விஷயத்தை உடனடியாகச் செய்து முடித்தார். குடும்பத்தை லண்டன் நகரத்திற்கு



அழைத்துச் சென்று, அங்கேயே வசித்து வர ஆரம்பித்தார்.

ஆனால்—தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டுமல்லவா? அதே போல, லண்டனிலும் கடன் சுமை ஏறியது. கடன் கொடுத்தவர்கள் நயமாய்க் கேட்டுப் பார்த்தார்கள்; பயங்காட்டிப் பேசினார்கள்; முஷ்டியை உயர்த்திக் காட்டினார்கள். ஊஹூம்! பணம் பெயரவே இல்லை. முடிவில் சட்டம் என்ற தீபஸ்தம்பம் அந்த 'மாலுமி' களுக்கு வழிகாட்டியது!

அக்காலத்தில் இங்கிலாந்தில் 'கடன்காரர் சிறை' என்று ஒன்று இருந்ததாம். அதன் அகன்ற வாசல் திறந்து தந்தை டிக்கென்ஸை விழுங்கிக் கொண்டது.

எழுத்தை இழந்த புத்தகம் போலானான் மகன் டிக்கென்ஸ். வாழ்க்கை என்ற புத்தகத்தின் தந்தை என்ற எழுத்து மறைந்து போனால்..?

சார்ல்ஸ் டிக்கென்ஸின் உறவினர் ஒருவர் செய்தி கேட்டு வந்து சேர்ந்தார். விஷயத்தை அவரிடம் சொன்னான் டிக்கென்ஸ். கிட்டங்கி ஒன்றில் போத்தல்களுக்கு லேபிள் ஒட்டும் வேலை கிடைத்தது அவர் உதவியால்.

* * *

போத்தல்களைத் துடைத்து விட்டு லேபிளை அதன்மேல் ஒட்டும் வேலை டிக்கென்ஸிற்குக் கசந்தது. அந்தக் கிட்டங்கியை அவன் அடியோடு வெறுத்தான். 'சீ! மனிதர்களா அவர்கள்? சின்னஞ்சிறு பாலகர்களை வேலைக்கு வைப்பானேன்; அவர்களின் சிறு தவறுகளுக்கும் செம்மையாய் உதை கொடுப்பானேன்?' கைகள் லேபிளை ஒட்டினாலும், எண்ணங்கள் எனும் உளிகள் அவன் பாறை மனத்தில் இந்த நிகழ்ச்சிகளைச் செதுக்கி வைத்தன.

அந்தப் பூலோக நரகத்திலிருந்து விடுதலை கிடைக்காதா என ஏங்கினான் சிறுவன் டிக்கென்ஸ். அச்சமயம் அவனுடன் வேலை செய்தவன், "டிக்கென்ஸ், பாடசாலைக்குச் சென்று பயின்றால் நல்ல உத்தியோகம் கிடைக்கும் என்று சொல்கிறார்களே! நீ அப்படிச் செய்தால் என்ன?" என்ற யோசனையைக் கிளப்பி விட்டான். அவ்வளவு தான்; டிக்கென்ஸ் உடனே தன்னுடைய வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டான்!

கிட்டங்கியில் சம்பாதித்த சொற்ப ஊதியத்தில் ஒரு பகுதியைச் சேமித்திருந்தான். அதுவே பள்ளிக்கூடச் செலவுகளுக்கு ஓரளவு முதலில் உதவியது. ஆனால் அது எந்த மூலைக்கு?

எனவே பள்ளிப் படிப்பு இரண்டாவது வருடத்துடன் முற்றுப் பெற்றது. டிக்கென்ஸ் துணிந்து சென்று ஒரு வழக்கறிஞரிடம் வேலை கேட்டான்.

வழக்கறிஞர் உற்றுப் பார்த்தார் பையனை.

வேலையை இலகுவில் பிடித்துக் கொள்ளும் சக்தி கண்களில் மிதந்தது போலும் டிக்கென்ஸிற்கு! உடனே லிகிதர் (Copist) வேலை கிடைத்தது. பொறுப்புடன் அவ்வேலையைச் செய்து வரும் நாளில் தான் பொறுமையுடன் சுருக்கெழுத்தையும் கற்றுக் கொண்டான் டிக்கென்ஸ்.

அதன் பயனாகப் பத்தொன்பதாவது வயதிலேயே, பிரதிநிதிகள் சபை (ஹவுஸ் ஆப் காமன்ஸ்)யில் ரிப்போர்ட்டராகப் பதவி ஏற்றான் புத்திசாலி டிக்கென்ஸ். பிரதிநிதிகள் சபையில் வெடித்த நகைச்சுவை வேட்டுகளைப்பற்றித் தனக்குள் எண்ணிக் கொண்டான் டிக்கென்ஸ்.

'படித்துப் பட்டம் பெற்றவர்களால் மட்டுந்தானா அப்படி ஹாஸ்யமாகப் பேசவும் எழுதவும் முடியும்? என்னால் ஏன் முடியாது?'

சிந்தனை சிரிப்பாக மாறி, சிறந்த துணுக்காக உருவெடுக்கவே, அதை 'மன்த்லி மாகஸின்' என்ற பத்திரிகைக்கு அனுப்பினான். வெற்றி! தொடர்ந்து எழுதினான். அவைகளே பின்னர் 'ஸ்கெச்சஸ் பை பாஸ்' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தன. அந்தப் புத்தகம் பெற்ற மகத்தான வரவேற்பின் பயனாக, 'பிக்விக் பேப்பர்ஸ்' என்ற தொடரைப் பெற்றுக்கொண்டனர் பதிப்பாளர்கள்,

குழந்தைப் பருவத்திலே நடந்த சம்பவங்கள், கிட்டங்கியில் அனுபவித்த கொடுமைகள், தந்தை அடைபட்டுப்போன சிறைச்சாலை, தான் வாழ்ந்த நிலைமை முதலியவை அவன் கற்பனைத் தொழிற்சாலைக்குள்




புகுந்து, புத்தம் புது நவீனங்களாக, வாழ்க்கையின் உயிர்ச் சித்திரங்களாக வெளிவந்தன.

சாதாரண டிக்கென்ஸ் மதிப்பாக சார்ல்ஸ் டிக்கென்ஸ் என்று யாவராலும் போற்றிப் புகழப்பட்டான். டிக்கென்ஸ் குழந்தைகளைத் தன் கண்ணெனப் போற்றினான். குழந்தைகளின் சீர்திருத்தப் பாதை எப்படியிருக்க வேண்டும் என உலகத்தின் முன்னிலே வாதாடினான்.

‘ஆலிவர் டுவிஸ்ட்’, ‘டேவிட் காப்பர் ஃபீல்ட்’ ஆகிய இரு நாவல்களிலும் தனது கிட்டங்கி அநுபவத்தை அப்படியே எழுதியிருக்கிறான் மேதை டிக்கென்ஸ்.

டிக்கென்ஸின் வாழ்க்கையில் எத்தனையோ சுவாரஸ்யமான சம்பவங்கள் நடைபெற்றிருந்தாலும், ஒன்று மட்டும் நமது மனத்தைக் கவருவதாக இருக்கிறது.

‘நிக்கொலாஸ் நிக்கிள்பை’ என்ற நாவல் எழுதிய டிக்கென்ஸ் அதிலே அக்கால உபாத்தியாயர்கள் குழந்தைகளைப் பிரம்பினால் இம்சிக்கும் முறையைக் கண்டித்து எழுதியிருந்ததால் அதைப் படித்த ஓர் ஆசிரியருக்குப் பொத்துக்கொண்டு வந்தது கோபம். இன்னும் சில ஆசிரியர்களைக் கூப்பிட்டுக் காட்டினார்.

எல்லோருமாகச் சேர்ந்து டிக்கென்ஸ் மேல் வழக்குத் தொடுப்பதாகக் கூறினார்களாம். வேறு

யாரை வேண்டுமானாலும் பகைத்துக்கொள்ளலாம்; ஆனால் இந்த எழுத்தாளர்களைப் பகைத்தலே கூடாது என்று திருவள்ளுவரே கூறியிருக்கிறார். டிக்கென்ஸிற்கு இதெல்லாம் அப்போது தெரியுமோ என்னவோ? ஆனால்—

அவன் மிரளவில்லை; உண்மையை உரைத்தோம் என்ற பெருமையுடன் அவன் நிமிர்ந்திருந்தான். ஆசிரியர்கள் அடங்கிவிட்டனர்.

டிக்கென்ஸ் அதைப் பெரியதோர் வெற்றியாகக் கருதவில்லை. மூன்று நாவல்கள் வெளியான பின்பு இங்கிலாந்தில் குழந்தைகள் விஷயத்தில் அதிக அக்கறை கொண்டது அரசாங்கம். டிக்கென்ஸின் கருத்துக் கிணங்க பற்பல சீர்திருத்தங்கள் அமலுக்கு வந்தன. அதைத்தான் தம் வெற்றி என்று எண்ணிப் பெருமிதம் கொண்டார் டிக்கென்ஸ்.

கிளிப் பிள்ளைகள்போல் குழந்தைகள் பாடங்களை மனனம் செய்வதை வெறுத்த டிக்கென்ஸ், அதனால் ஏற்படும் தீமைகளை விரிவாகக் கூறினான். இடையிலே அமெரிக்காவிற்குப் புறப்பட்டான். சுற்றுப்பிரயாணம் தந்த புதுமை அநுபவங்களை நாவல்களாக எழுதித் தள்ளினான் அந்த 'வரகவி'.

குழந்தைகளின் சீர்திருத்தத்திற்காக வாதாடிய இந்த 'வக்கீல்' கிறிஸ்துமஸ் கரோல்ஸ் என்று ஒரு நூலை எழுதினான். சிறியோர் முதல் பெரியோர் வரை விரும்பிப் படித்த நூல். ஒரே நாளில் ஆறாயிரம் பிரதிகள் விற்றனவாம்.

குறுந்தாடி, கறுப்புக் கோட்டு, ஒட்டியுலர்ந்த கன்னங்கள், தீட்சண்யம் நிறைந்த கண்கள்-இந்த உருவந்தான் சார்ல்ஸ் டிக்கென்ஸ்.

ஆங்கில இலக்கியத்திற்கு அரும் சேவை செய்த இந்த மேதையின் நூல்களில் அற்புதமான கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன.

---

# பாரதி யார்?

பாப்பாப் பாட்டு பாடியதார்?
'பாரதி' எனப்புகழ் பெற்றதுயார்?
தோப்புக் குயிலின் கதையினையே
தூய தமிழில் தந்ததுயார்?
கண்ணன் பாட்டுப் பாடியதார்?
கவிதைத் திறத்தால் உயர்ந்ததுயார்?
எண்ணம் தன்னில் புரட்சியினை
எழுப்பும் பாடல்கள் புனைந்ததுயார்?
வெற்றி முரசம் கொட்டியதார்?
வீர சுதந்திரம் வேண்டியதார்?
சற்றும் தளரா ஊக்கமுடன்
சாகாக் கவிதைகள் படைத்ததுயார்?
பட்டினி கிடந்து தவித்தாலும்
பாட்டுப் பாடி மகிழ்ந்ததுயார்?
எட்டய புரத்தில் பிறந்தவரில்
இறவாப் பெரும்புகழ் எய்தியதார்?
மண்டபம் கட்டி மக்களெலாம்
வாழ்த்தி வணங்கிடும் நல்லவர்யார்?
கண்டவர் வியக்கக் கவிபொழிந்த
கவிச்சக்ர வர்த்தி பாரதியார்!

—கோபதி

---

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கிளைக் கழகம்

கோட்டாறு { உபதலைவர்: டி. ஸி. பிச்சை
செயலாளர்கள்: எம். ஏ. சாமி, டி. ஜார்ஜ்
பொருளாளர்: எம். ராஜேந்திரன் }

ஐந்து பேர்கள் அடங்கிய செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. திரு எம். ஏ. சாமியை ஆசிரியராகக் கொண்டு 'வளர்மதி' என்னும் மாதாந்தரக் கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. விஷய தானம் செய்வோர் D. C. பிச்சை, சவேரியார் கோயில் தெற்குத் தெரு, கோட்டாறு, கன்னியாகுமரி ஜில்லா என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

பாளையங்கோட்டை { உபதலைவர்: சி. சேவியர்ராஜ்
செயலாளர்: பிச்சையா
பொருளாளர்: கதிரேசன் }

ஐந்து பேர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டுள்ளது. 'வளர்பிறை' என்ற வாசகசாலையும் 'செந்தாமரை' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. கதைகள் அனுப்பும் முகவரி: சி. சேவியர்ராஜ், புனித சவேரியர் விடுதி, பாளையங் கோட்டை.

மணப்பாறை { உபதலைவர்கள்: வெ. அழகப்பன்
மு. சாகுல்ஹமீத்
செயலாளர்கள்: மீ. முகமதுஅலி
அ. உசேன்மஸ்தான்
பொருளாளர்: ந. சுப்பையா }

பத்து அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. 'இன்சுவை' என்ற கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்படுகிறது. தொடர்பு கொள்ளும் விலாசம்: வெ. அழகப்பன், நான்காம் படிவம், உயர்நிலைப்பள்ளி, மணப்பாறை.

## பேனா நண்பர்கள்

1. வெ. புருஷோத்தமன், 5, ஆரிசெட்டித் தெரு, திருப்பத்தூர், (வ. ஆ)
2. எஸ். நாகராஜன், 20, வடக்கு மாசிவீதி, மதுரை.
3. ஏ. ஆர். சோமசுந்தரம், 8, வட்டாணம் ரோடு, தேவக்கோட்டை.
4. ஆர். சம்பத்குமார், 37. கொத்தவால்சாவடித் தெரு, மஞ்சக் குப்பம், கடலூர். (என். டி.)
5. மா. சின்னமுனியப்பன், C/o வி. எம். எஸ். சவுண்டு சர்வீஸ், எரியோடு. (வழி) திண்டுக்கல்.
6. அ. அழகேசன், தீனம்பாளையம், கலிங்கநாயக்கன்பாளையம் அஞ்சல், கோவை ஜில்லா.
7. அ. உ. சுல்தான், C/o கோ. அ. உம்மர் கத்தாப், 16 A/ 27 ஹாபீஸ்பேட், கோவை.
8. கே. அக்பர் உசேன், 12, கோரிகுளம் சந்து, ஜாபர்ஷா தெரு, திருச்சிராப்பள்ளி.
9. ரா. பட்டாபிராமன், ஐந்தாம் படிவம், ரா. கி. வித்தியாலயம் கோயம்புத்தூர்.
10. வி. எஸ். மணி, பெரிய தெரு, கோட்டாறு, கன்னியாகுமரி ஜில்லா.
11. சு. ஞானசேகரன், ஆரும் அமைப்பு, ந. க. உயர்நிலைப்பள்ளி, வெண்ணந்தூர், சேலம் ஜில்லா.
12. ஏ. கே. குமாரன், 500/30 R. ஹார்பர் லேன், மலுமண் டோல் ரோடு, கொழும்பு-15.

(Regd as a Newspaper in Ceylon) Regd. No. M. 5542



# கண்ணன்

## வெளியீடுகள்

| | | | ரூ.ந.பைச |
|---|---|---|---|
| 1. | தங்க மாம்பழம் | ராஜி | 2·00 |
| 2. | லீடர் மணி | ஆர்வி | 1·50 |
| 3. | சைனா சு-சூ | ஆர்வி | 1.50 |
| 4. | ஜிம்மி | பெ. தூரன் | 1·50 |
| 5. | சந்திரகிரிக் கோட்டை | ஜனா | 1·25 |
| 6. | அசட்டுப் பிச்சு | ஆர்வி | 1·00 |
| 7. | மஞ்சள் பங்களா | ஜி. ஜயராமன் | 1·00 |
| 8. | சின்ன ராஜா | வாசகன் | 0·75 |
| 9. | பவழவல்லி | கி. ரா. | 0·75 |
| 10. | கவிஞர் கதை | கி. வா. ஜ. | 0·62 |
| 11. | விளையும் பயிர் | கி. வா. ஜ. | 0·50 |
| 12. | சமர்த்து மைனா | தி. ஜ. ர. | 0·50 |
| 13. | அபாயச் சங்கு | நீலம் | 0·50 |
| 14. | ஜக்கு | ஆர்வி | 0·50 |
| 15. | ஜம்பு | ஆர்வி | 0.5 |
| 16. | ஏரிக்கரை மாளிகை | ஜனா | 0·5 |
| 17. | மின்னல் அரக்கன் | ஜனா | 0·50 |
| 18. | ராஜாவும் குருவியும் | சோமசன்மா | 0·50 |
| 19. | கழுகும் கிளியும் | சோமசன்மா | 0·50 |
| 20. | தவளையும் காளையும் | சோமசன்மா | 0·50 |
| 21. | விஞ்ஞானம் பேசுகிறார் | பெ. நா. அ. | 0·50 |
| 22. | புலிக் குட்டி | ஆர்வி: ஸாமி | 0·40 |
| 23. | பாரஸீக ரோஜா | ஆர்வி: ஸாமி | 0·32 |
| 24. | தூங்கும் அழகி | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 25. | குளிகைத் தீவு | ஆர்வி: சங்கர் | 0·25 |
| 26. | மாஸ்டர் பாலகுமார் | ஆர்வி: ஸாமி | 0·25 |
| 27. | நீச்சல் பழக்கம் | டிமான்ஸ்டிரேட்டர் | 0·20 |
| 28. | பார்வதியும் ஏழு சித்திரக்குள்ளர்களும் | எஸ். ஜே. | 0·20 |
| 29. | கோழி விதைத்த நெல் | சூடாமணி | 0·20 |
| 30. | தங்கத்தின் பந்து | சூடாமணி | 0·20 |
| 31. | என் பேர் என்ன? | சூடாமணி | 0·20 |

சந்தாதார்களுக்குக் கமிஷன் உண்டு

ஐந்து வயது முதல் பதினாறு வயது வரையில் உள்ளவர்களுக்காகப் பல அழகான கண்ணன் வெளியீடுகள் இவை.

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4.**